27492

வெளியீடு எண் 34.

# திருவிடைமருதூர் நொண்டிநாடகம்

19188

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

வெளியீடு எண் 34.

உ

சிவமயம்

அனந்தபாரதி இயற்றிய

# திருவிடைமருதூர் நொண்டிநாடகம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

கட்டளையிட்டருளியபடி


வெளியிடப்பெற்றது.

வைகாசி வசந்தோற்சவ வெளியீடு

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

1967



ஸ்ரீ மகாலிங்கப்பெருமான்

உ

சிவமயம்

# முன்னுரை

---

வேதங்கள் நான்குங் கொண்டு
விண்ணவர் பரவி ஏத்தப்
பூதங்கள் பாடி யாட
லுடையவன் புனிதன் எந்தை
பாதங்கள் பரவி நின்ற
பத்தர்கள் தங்கள் மேலை
ஏதங்கள் தீர நின்றார்
இடைமரு திடங்கொண் டாரே.

— திருநாவுக்கரசுசுவாமிகள்.

தமிழில் இடைக்காலத்தில் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள் தோன்றிற்று. மிகப் பிற்காலத்தில் சிந்து என்ற ஒருவகை இசைப்பாட்டுத் தோன்றிற்று. பள்ளு, நாடகங்கள், குறவஞ்சி முதலிய பற்பல நூல்கள் அவ் வகையில் நாட்டில் தோன்றலாயின. சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் காவடிச் சிந்து என்ற இசை நூலைத் தமிழுக்கு முதல்முதலாக ஆக்கி அளித்தார். தாயுமானவர் பாடலிலுள்ள ஆனந்தக் களிப்பும், இச் சிந்து என்னும் இசைநூல் வகையைச் சார்ந்ததே. நொண்டிச் சிந்து என்ற ஒரு சிந்தும் வழக்கிலிருக் கிறது. பின் அது வழக்கிழந்தது.

சிந்துவகையைச்சார்ந்த இசைநூல்கள் பல 18-ம் நூற்றாண்டிலே தோன்றியதாக இலக்கிய ஆய்வாளர்

களால் கருதப்படுகிறது. இவைபற்றிய விளக்கங்கள் பழைய செய்யுளிலக்கணமாகிய யாப்பருங்கலக்காரிகை போன்ற நூல்களில் காணப்படவில்லை. இசையோடு பாடும் வகையில் கவிஞர்களது கற்பனையில் தோன்றிய புதியவகைச் சிந்துப் பாடல்கள் நாடகத்துறையைச் சேர்ந்தவை. அக்காலத்து மக்களால் அது போற்றப் பட்டு வந்தது.

நொண்டிச்சிந்து வகையைச் சார்ந்ததே இந்த நொண்டி நாடகம். இக்காலம் இந்த நொண்டி நாடகத்தைப் பாடி நடிப்பவரும் கேட்பவரும் அருகிவிட்டதால் நொண்டி நாடகத்தின் பெயர்க்காரணம்பற்றிப் பலரா லறிந்துகொள்ள இயலாமல் இருக்கிறது. இடையிலே தோன்றி இடையிலேமறையும்நிலை இந்நாடகநூலுக்கு ஏற்பட்டுவிட்டது.

திருச்செந்தூர் நொண்டி நாடகம், சீதக்காதி நொண்டி நாடகம், திருமலை நொண்டி நாடகம், திருவிடைமருதூர் நொண்டி நாடகம் ஆகிய இந்நான்கும் நூல்வடிவிலே அச்சிடப்பட்டுள்ளன. இவையன்றிச் சாத்தூர் நொண்டி நாடகம், அவிஞசி நொண்டி நாடகம், குளத்தூர் ஐயன் நொண்டி நாடகம், ஞான நொண்டி நாடகம் ஆகியவை இன்னமும் அச்சேருமல் உள்ளன.

இவற்றுள் திருவிடைமருதூர் நொண்டி நாடகம் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு பாடப்பட்டதாகக் கருதப்படுகிறது.

தக்க திருச்செந்தூரில் நொண்டி – வெகு
சாத்திரத்தைப் பார்த்துகந்த சாத்தூரின் நொண்டி
மிக்க திருப்பழனி நொண்டி – இன்னம்
வெற்றி பெற்ற தென்றலத்திற் குன்றக் குடிநொண்டி

என்று குறிப்பிடப்படுவதால் இதற்கு முன்னர் உள்ள நொண்டி நாடகங்களை இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார் எனலாம். இதிலிருந்து நாம் காலத்தை ஒருவாறு கணித்தறியலாம். அன்றியும் நூல்வந்த முறையையும் தெரிந்துகொள்ளலாம்.

திருவிடைமருதூர் நொண்டி நாடகத்தில் வரும் நொண்டி வீசங்கநாட்டினன் என்றும், தன்னை இந்திர குலத்தைச் சேர்ந்த கள்ளர்மரபினன் என்றும், சூர ரெத்தினத்தின் மகன் வீரசிங்கன் என்றும் சொல்லிக் கொள்ளுகிறான்.

இந்த நொண்டி நாடகத்தை இயற்றியவர் அனந்த பாரதி ஐயங்கார். இவர் தஞ்சாவூரில் வாழ்ந்தவர். தஞ்சை அரண்மனை வித்துவான். இவர் காலம் கி. பி. 1786 – 1864 ஆகும். உத்தரராமாயணக் கீர்த்தனை, பாகவத தசமஸ்கந்த நாடகம், தேசிகர் பிரபந்தம், மருதூர் வெண்பா, யானைமேலழகர் நொண்டிச்சிந்து, முப்பாற்றிரட்டு என்ற நூல்களையும் இவர் ஆக்கியுள்ளார். திருவிடைமருதூர்ப் பெருமானிடம் மிகவும் ஈடுபாடுடையவர். இவ்வுண்மை நூலின் போக்கால் அறியப்படுகிறது. இவரே இந்நாடகத்தைத் திருக்கோயில் நாடகமண்டபத்தில் நடித்ததாக வரலாறு கூறுகிறது. நாடகமண்டபம் என்னும் நாடகசாலை இக்கோயிலில் இருந்ததாகக் கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது.

ஆசிரியர் தன்னுடைய குறிக்கோள் சிவதலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபட்டு அவனருள் பெற்று முடிவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றுனும் சிறப்புடைய இடைமருதூரை அடைந்ததாகக் கூறுகிறார். அனந்தபாரதி ஐயங்கார் பல மொழிகளிலும் சுயம்பாடும் அளவு வலிமைபெற்றவர் என்று தெரிய வருகிறது.

ஆரிய குரு தன்னிடத்தில் — வய
தஞ்சிற் படிக்கவும் ரஞ்சிதமாய்
ரஞ்சித முடனே வைத்தான் — நானும்
நல்ல கிரந்தமும் சொல்லுந்தமிழ்
மிஞ்சு கன்னடந் தெலுங்கு — மோடி
மிக்க சிறப்பாந் துலுக்குடனே
துலுக்கும் யிதுகளிலே — சுயஞ்
சொல்லுந் திறமைக்கி வல்லமையாய்
பலுக்குஞ் சங்கீதங்களும் — எல்லாம்
பனிரெண்டு வயதுக்குள்

என்ற குறிப்பிலிருந்து இவர் வடமொழி, தமிழ், கன்னடம், தெலுங்கு, மோடி (தஞ்சையை ஆண்ட மராட்டியர் தாய்மொழி), துலுக்கு, சங்கீத சாஸ்திரம் ஆகியவைகளைப் பன்னிரு அகவைக்குள் பயின்று முடித்ததாகக் கருதவேண்டியுள்ளது. இவர் இருந்த காலம் தஞ்சை அரசர்களின் ஆட்சி சிறந்தோங்கியிருந்தமை அறிந்த ஒன்று. தஞ்சை அரசர்களையும் இந்நூலுள் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்நாடகத்துள் மேலே கூறிய மொழிச்சொற்கள் விரவிய பாடல்கள் பல காணப்படுகின்றன. இவரது பல மொழியறிவும், இசையறிவும் ஏற்றமுற விளங்கும் நிலையில் உள்ளன. பாகவத பரம்பரையினர்கள் பல மொழியறிவு பெற்றவர்களாகவே பண்டு விளங்கினர். இன்றும் அவ்வாறே.

இந்நாடகத்தின் தொடக்கத்தில் கடவுள்வாழ்த்தை யடுத்துத் தோடையம் என்ற ஒரு பாடல் உள்ளது. இடையில் தரு, விருத்தங்களும்; முடிவில் ஆனந்தக் களிப்பும் உள்ளது. தரவுமுழுதும் ஒருவகை சிந்துப் பாடல்களாகும். இந்நூலில் வாழ்த்து முடிய முப்பது

பாடல்கள் உள்ளன. பெரும்பாலும் திருச்செந்தூர் நொண்டி நாடகத்தை ஒட்டியதாகவே இது காணப் படுகிறது. கவிஞர் இடத்துக்கேற்பச் சில செய்திகளைச் சிறப்பாக மாற்றி அமைத்துள்ளார்.

நூலின் கதாநாயகனுகிய நொண்டி மேடையில் தோன்றித் தன்னுடைய வரலாற்றைப் பாட்டாகப் பாடத் தொடங்குகிருன். இந்நாடகத்தில் நொண்டி ஒருவனே நாடகத்துக்குரிய உறுப்பாவான். அவன் தன்னை மிக நல்லமுறையில் அலங்கரித்துக்கொண்டு மேடைக்கு வருவான்.

இந்நொண்டி பொன்னி நதியிலே நீராடி, திரு நீறு அணிந்து சிவபஞ்சாட்சர உருவேற்றி, கையில் குளிசக்கயிறும், மார்பில் ரசமணியும் மின்ன முத்து மாலைகள் அணிந்து 'விருதுகட்டினேன்' என்று கூறு கிருன். விருதுகட்டினேன் என்ருல் கொடிகட்டினேன் என்று பொருளாகும். அவனது வேடம் வருமாறு:-

நெற்றிதனிற் பொட்டு மட்டாய் — இட்டுநவ
ரத்தின முருகுகாதில் உற்றசேர்வை யொட்டு
வெற்றியாங் தங்கக்கடுக்க னிட்டு — நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட் டினேனே.

பொன் சரிகைப் புள்ளி உருமாலை — வாகைப்
பூவணிந்து கட்டியுள்ளே மேவுமிந்திரசாலை
விஞ்சை மூலியொன்றை வைத்துக்காலை — நொண்டி
விளம்பரஞ் சபையி லாட விருதுகட்டினேனே.

வாசமுள்ள கெந்தமார்பிற் பூசி — நற்சவ்
வாதுப்பட்டை திமிர்ந்து மாதுரியம் பேசி
மீசையை முறுக்கிக் கையை வீசி — நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டினேனே.

ஒரு காலையிழந்த நொண்டி விஞ்சைமூலியொன்று வைத்துக் காலைக் கட்டிக்கொண்டுவந்து நின்று தன்னுடைய வீரப்பிரதாபங்களை முதலிலேயே கூறிவிடுகிருன். இதுதான் நூல்மரபாம். இவ்வாறு நொண்டி தானே தன்னை அவைக்கு அறிமுகஞ்செய்து கொள்ளுகிருன். பின் நொண்டி தனது வரலாற்றை நொண்டிச் சிந்தில் பாடத்தொடங்குகிருன். இனி அவன் கூறுகின்றதை அவன் வாயிலாக நோக்குவோம்.

விசங்கநாட்டில் கள்ளர்மரபில் பீடுபெற்ற இந்திர குலத்தில் நொண்டி பிறந்தவன். நொண்டியின் தகப்பன் பெயர் சூரரெத்தினம். நொண்டியின் பெயர் கெடிவிர சிங்கன். எங்கள் கொடி புலிக்கொடி. சூது, வாது, பொய், களவு, புரட்டு, உருட்டு ஆகிய கலைகளில் நான் கைதேர்ந்தவன். அதில் சிறப்பான பெயரும் புகழும் எனக்கு உண்டு. நான் திருட எண்ணிஞல் உலகில் எனக்குக் கிடைக்காத பொருள் எதுவுமில்லை. காத்தக்குட்டி என்னை வலுவில் அழைத்து அவன் தன் மகளை மணஞ்செய்து வைத்தான். கல்யாணத்தில் விழுந்த மொய்ப்பணங்களை எடுத்துக்கொண்டு பல தலங்களையும் சென்று நான் வழிபட எண்ணினேன், திரிசிரபுரம் முதலிய இடங்களை வழிபட்டுத் திருவையாறு அடைந்தேன். ஐயாறப்பர் அடியிணையை அகங்குளிரக்கண்டு வழிபட்டுக் களிப்படைந்தேன்.

திருவையாறு வழிபட்டு வழியிலுள்ள சுவாமிமலை முதலிய பல தலங்களையும் வழிபட்டுக்கொண்டு குடமூக்கை அடைந்தேன். பகவத் படித்துறையைக் கண்டேன். மகாமகக்குளத்தில் நீராடினேன். நாகேசுரரையும், சாரங்கபாணியையும்கண்டு வழிபட்டேன். கும்பேசுரர் திருக்கோயிலை அடைந்தேன். மூன்றுமுறை அக்கோயிலை வலம்வந்தேன். பின் உள்ளே சென்றேன்.

இறைவரை வழிபடும்போது அங்கு நின்ற தாசிகள் கூட்டத்தைக் கண்டேன். இங்கு ஆசிரியர் பல தாசிகளின் பெயரைக் குறிப்பிடுகிருர்.

அத்தாசிகளுள் தங்கமுத்து என்பவளும் ஒருத்தி. அவள் ஆடலிலும் பாடலிலும் ஈடுபட்டு அவள்பின் நான் சென்றேன். அவளைத் தஞ்சமென்று அடைந்த என்னைத் தோழியைவிட்டு அழைத்தாள். என்னைச் சேர்த்துக்கொண்டாள். நானும் அவளுடைய கூட்டம் நிலைத்தது என்று எண்ணினேன். அவள் என்னுடைய நிலையைக் கேட்டாள். நானும் உள்ளதைச் சொன்னேன். உடனே என் குடும்பத்தோடு பழமையான உறவும், உரிமையும் உடையவள்போல உரையாடிஞள். வீட்டினுள் அழைத்துச்சென்ருள். அவள் வீட்டினழகு சொல்லுந்தரத்ததன்று.

வீட்டை அடைந்ததும் நான் வந்துள்ள செய்தியைத் தாய்க்கிழவி அறிந்தாள். உடனே தாய்க்கிழவி வந்தாள். தனக்குப் பெருஞ்செல்வம் எளிதில் கிட்டி விட்டதாக எண்ணினுள். இவர் தொட்டதெல்லாம் பொன்னுகும்; இவர் நமது வீட்டுக்கு உரியவர்போல் காணப்படுகிருர்; இதுவே நாம் பெற்ற பெரும்பேறு என்று கூறினுள். வாயார வாழ்த்திஞள். நான் என் வசமிழந்தேன்.

தாய்க்கிழவி தன்மகள் தங்கமுத்துகையால் எனக்கு அறுசுவை அமுதளித்தாள். சந்தனம் சவ்வாது பூசச் செய்தாள். தங்கமுத்துவும் தேவமாதர்போல் தன்னை அலங்கரித்துக்கொண்டு என்முன்னே வந்துநின்ருள். நானும் மனத்தை அவளிடம் பறிகொடுத்தேன். அவள் வீட்டிலேயே பலநாள் தங்கிவிட்டேன். என்னை ஒரு பொம்மைபோல் ஆட்டிஞள்; அறிவை மயக்கிஞள்.

என் கையிலுள்ள பொருள்களைப் பறிக்கப் பலவித கெட்ட சரக்குகளைச் சேர்த்து எனக்கு மருந்திட்டாள். நான் சுய அறிவை இழந்தேன். நல்ல புடவை வாங்க வேண்டுமென்றும், பால் பசுவாங்கவேண்டுமென்றும், கட்டில் என்றும், பஞ்சணை என்றும், விளக்கு என்றும் கேட்டாள். நானும் அவள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தேன். அதனால் என்னிடமுள்ள பொருள்களை யெல்லாம் விரைவில் இழந்து நான் வறியவனுனேன். முடிவில் ஒன்றுமில்லாத நிலையை அடைந்தேன். என் வறிய நிலையறிந்து தங்கமுத்துவும், அவளுடையதாயும் என்னை வெறுக்கத்தொடங்கினர்கள். உடனே என்னை வெளியில் துரத்திவிடவும் துணிந்தார்கள். வேசையர் குணம் இதுதானே.

நான் தங்கமுத்துமீது கொண்ட ஆரா ஆசை யால் அவளுக்குப் பணம் கொடுப்பதற்காகத் திருடுவ தென்று முடிவுசெய்தேன். ஆனால் சிவபூசை, அரிபூசை பண்ணுவோர், சாத்திரங்கள் வேதங்கள் படித்தோர், சத்திரம் சாலை சோலையமைத்தோர் ஆகிய புண்ணியர் கள் வீட்டில் திருடுவதில்லையென்று முடிவுசெய்தேன். தாசி வீட்டிலேயே திருடினேன். திருடிய பொருளைக் கண்ட தங்கமுத்துவும், தாய்க்கிழவியும் பேரானந்தங் கொண்டார்கள். முன்னிலும் பன்மடங்கு அன்பு காட் டினர்கள்; பணத்தாசையால் பண்புகாட்டினர்கள்.

ஆயினும் என்னல் அவர்கள் நடிப்பை நம்பவே முடியவில்லை. திருடியபொருளைப் பெட்டியுடன் எடுத் துக்கொண்டேன். நாச்சியார்கோயிலை அடைந்தேன். சேஷபட்டர் வீட்டில் பொருளை அடைக்கலமாக வைத் தேன். பலதலங்களையும் வழிபட்டுக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்றேன். ஆற்காட்டை அடைந்தேன். விலங்கு, கத்தி, பூட்டு இவைகள் தெறித்து இரண்டா காகக்கூடிய பலமூலிகைகளும், பொடிகளும், மைகளும்

கையிலடக்கிக்கொண்டு சிப்பாயிவேஷங்கொண்டேன். மேலும் துப்பாக்கி, சிவப்பு வில்லையுமணிந்தேன். நல்ல தலைப்பாகையும் வைத்துக்கொண்டேன். இந்நிலையில் நபாபு அரண்மனையை அடைந்தேன். அங்கு நபாபு அரண்மனையில் கன்னடர், தெலுங்கர், துலுக்கர் ஆகிய காவற்காரர்களோடு அவரவர் மொழிகளிலே பேசி ஏமாற்றி அரண்மனையினுள் சென்றேன். நபாபுவைப் பார்த்தேன். நபாபு என்னுடைய கள்ளவேடத்தை அறிந்துகொண்டான். சிறையிலடைத்துத் துன்புறுத்தினன். உடன் நான் என்னிடம் இருந்த மூலிகையைத் தெறித்து விலங்குகள் பூட்டுக்களை உடைத்தேன். காவற்காரர்களுக்குப் பொட்டிட்டு விலங்குமிட்டேன். உடன் பணவறைக்குச் சென்று பத்துப்பை பணம் எடுத்துக்கொண்டேன். சிறையிலிருந்து தப்பினேன். குதிரை லாயத்தை அடைந்தேன். அழகிய பச்சைநிறக் குதிரையைப் பற்றினேன். சுழிசுத்தம் உள்ள அந்தக் குதிரையின் மேலேறிக்கொண்டு வாடிக்கடை கடந்து புதுச்சேரி மார்க்கங்கண்டு ஒரு காட்டுவழியாகப் புறப்பட்டேன். புலி ஒன்று குதிரையை நோக்கிப் பாய்ந்து காலைப்பற்றியது. அவ்வாபத்தினின்றுமீள என்காலைக் கத்திகொண்டு வெட்டினேன். வெட்டியகாலைக் கட்டிக்கொண்டு கட்டிய சுவடு தெரியாமல் கரடகம் பண்ணி மேல் வரலானேன். வியாபாரி போன்று புதுச்சேரியை அடைந்தேன்.

பலதலங்களையும் வழிபட்டு முடிவில் சிதம்பரத்தை அடைந்தேன். சிவகங்கையில் நீராடினேன். திருநீறு அணிந்தேன். பின் இறைவனை வழிபடச்சென்றேன். கனகசபாபதி தீட்சிதரைக் கண்டேன். அவரிடம் என்னுடைய வரலாற்றைக் கூறினேன். அவர் திருவிடைமருதூர் மூர்த்தி தலம் தீர்த்தம் இம்மூன்றுனும் சிறப்புடையது; அங்கு சென்று வழிபடு. உன்பாவந்தீரும்

என்றூர். வெட்டுண்ட காலும் பண்டுபோல் வளர்ந்து விடும் என்றும் கூறினர். என்னுடைய நல்வினைகாரண மாக அதனை நம்பியேற்றேன்.

அதனைக் கேட்ட நான் சீர்காழி, வேளூர், மாயூரம், குத்தாலம், திருவாவடுதுறை முதலிய பலதலங்களையும் வழிபட்டேன். திருவிடைமருதூரை அடைந்தேன். திரு வழகைக் கண்டேன்.

திருவிடைமருதூர் வந்தவுடன் வீதியை வலமாக வந்தேன்; திருக்கோயிலை அடைந்தேன்; முதலில் ஏக நாயகரை வழிபட்டேன். அதுசமயம் தைப்பூசப் பெரு விழா. வீதியில் ஐந்து தேர்கள் பெருமானுடன் வந்து கொண்டிருந்தன. ஏகநாயகரின் தேரழகைக் கண்டு களித்தேன். தேருடன் வீதியை வலமாக வந்தேன். அடுத்தநாள் இறைவருடன் நான்கு வீதிகளையும் வல மாக வந்து காவிரி நதியை அடைந்தேன். கல்யாண தீர்த்தத்தில் நீராடினேன். இழந்த காலை இறைவன் அருளால் பெற்றேன். இவ்வாறு நொண்டி தன் வர லாற்றைக் கூறிமுடிக்கிருன்.

கி. பி. பதினெட்டாம் நூற்றுண்டில் தமிழ்மொழி யில் புதிதாகப் படைக்கப்பட்ட இந்தநொண்டிநாடகம் இன்று உலகில் விளக்கம்பெறவில்லை. அனேகர் இப் படியும் ஒரு காவியம் உண்டு என்று உணரவில்லை. ஆனல் நொண்டிச்சிந்து சிறப்படையவே, நொண்டி நாடகம் வழக்கிழந்துவிட்டது.

அனந்தபாரதி ஐயங்கார் இந்நாடகத்துள் உல கியலையொட்டி இன்று நடைமுறையில் உள்ள செய்தி களையே தமது நூலில் அழகுற எடுத்து விளக்கியுள் ளார். சிந்துப் பாடல்களும் வழக்கிலுள்ள சொற்களா லேயே ஆக்கப்பட்டுள்ளன. ஆற்காட்டில் நபாபுவின்

முன்னுல் சிப்பாய்வேடத்தில் சென்றபோது நொண்டி உரையாடலில்வைத்துத்தெலுங்கு, கன்னடம், துலுக்கு, மோடி ஆகிய இந்த மொழிச் சொற்களைக் கையாண்டுள்ளார். அவை அறிவுக்கு விருந்தாவன.

அக்கால மக்கள் நிலையை அறிய இந்நூல் ஓரளவு துணைபுரிகிறது. ஆலய நிர்வாகம், நடைமுறை, பூசை முதலியனவும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. அக்காலத்திய அறச்செயல்களும் விளக்கப்பட்டுள்ளது.

சிந்து, பள்ளு, குறவஞ்சி இவைகள் தோன்றுவதற்கு இரண்டு நூற்ருண்டுக்கு முன்னரே விறலிவிடு தூது தோன்றியது. இந்நூல்களுள் சில வேண்டாத செய்திகள் சொல்லியுள்ளது ஒரு சிலருக்குக் குறைபாட்டை உண்டாக்கலாம். ஆயினும் அவை புத்துணர்ச்சி ஊட்டுபவை. உலகில் நடக்கும் நிகழ்ச்சிகளையே ஆசிரியர் வகுத்துக்கொண்டு பாடுவதால் குறையேதுமில்லை.

பெரும்பாலும் நூற்கருத்துக்கள் விறலிவிடுதூதின் போக்கை ஒட்டியே அமைந்துள்ளது. பாடல்களின் போக்கு வேறு. இத்தகைய தமிழ்க் கவிதைகள் தமிழ் செய்த தவமே தோன்றியது. இவைகளையெல்லாம் வெளிக்கொணர்ந்து விளக்கமடையச்செய்வது தமிழர் கடமையாகும்.

இத்தகைய மறைந்துபோன நிலையிலிருந்த புதிய படைப்பாகிய இந்நூலைப் பதிப்பிக்குமாறு திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்தொன்ருவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையிட்டுப் பணித்தார்கள். இந்த நூல் சென்ற

விபவஹு' அதாவது தொண்ணூற்றெட்டு ஆண்டுக ளுக்குமுன்பு சென்னை கலாரத்திநாகரம் அச்சகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பிரதியின் துணை கொண்டே ஏற்ற திருத்தங்கள் செய்து இப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தான வெளியீடாக இந்நூல் வெளியிடப்படுகிறது.

இந்நூலில் சேர்க்கவேண்டியதாக அறிஞருலகம் வேறு ஏதேனும் தெரிவிப்பின் அடுத்த பதிப்பில் சேர்க் கப்படும். நூல் கிடைப்பது அரிதாக இருத்தலாலும், இந்நூலைக் காப்பாற்றவேண்டிய இன்றியமையாமை பற்றியும் இப்பொழுது இந்த அளவில் வெளியிடப்படு கிறது. பிழை பொறுத்தருள்க.

இங்ஙனம்

திருவிடைமருதூர்,
8—5—67.

பொன். சுப்பிரமணியபிள்ளை,
தலைமைத்தமிழாசிரியர்,
திருவாவடுதுறை ஆதீன உயர்நிலைப்பள்ளி.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

# திருவிடைமருதூர் நொண்டிநாடகம்

## கடவுள் வாழ்த்து

### விநாயகர் காப்பு

### விருத்தம்

திருமருவு சையமலை நதியாம் பொன்னித்
தென்கரையி னிடைமருதூர் செம்பொற் கோயில்
மருநினிடை யுறைவாணர் புகழ்சி றந்த
வாணிநா டகம்பாட மதுர வாக்கே
தருதியென் றுனைத்தொழுதேன் முதன்மை யாகத்
தனிமுதற்சேய் ஒருகோட்டுத் தந்தி முன்னாட்
சுருதியிசை மனுநீதி யுடனே யாழி
சூழ்புவியை ஆண்டபிள்ளை துணைசெய் வீரே.

### முருகன் - வாணி - பார்வதி துதி

பாணிபிறை கங்கைகொன்றை தும்பை சூடிப்
பணிபூண்டு விடையின்மேற் பரிந்தே யேறுந்
தாணுமூ காம்பிகையாள் முன்பு செய்த
தவம்பலிக்கச் சோதிர்மய லிங்க மாகி
ஊணியதில் யேகநா யகராய்த் தோன்றும்
ஒருபொருளாம் நிமலர்மரு தீசர் மீதில்
வாணிநா டகம்பாட வள்ளி கந்தன்
வாணிபார் வதிபதத்தை வணங்கு வோமோ.

## அவையடக்கம்

காரியமாய் உலகுமெங்கும் படைக்கும் வேதன்
காத்தருளும் சிதரனும் தேடிக் காணு
நாரிபெரு நலமுலையாட் கிறைவ னென்று
நாடியே பத்ரகிரி பட்ட ணத்தார்
பேரியல்பார் அடிபணிந்த மருதர் மீதில்
பிரபலமாம் நொண்டிநா டகமீ தொன்று
சூரியன்முன் மின்மினிபோல் புலவர் முன்னே
சூடிளுன் அனந்தகவி பாடி ளுனே.

தோடையம். இராகம் : நாட்டை. ஆதிதாளம்.

சோதிர் மயமகா லிங்கர் மீதினில்
மா துரிய தமிழ் ஒன் று வாணர்கள்
சூழும் அவையினில் நொண்டி நாடகமே
பண் பாடவே ஆ - ஆ

வேத முனிவர்களும் தயாநிதி
யேகிருபை செயும் என் று தாள்தொழும்
மேன்மை பெறுபுவி ஆண்ட பிள்ளையாரே
கொண் டாடவே ஜய - ஜய

மேக வாகனன் அனுதி னம்பணி
யேக நாயகர் அருள்பு ரிந்திடும்
மேன்மை தானிது வேசிறந் திடவே
நண் பாகவே ஆ - ஆ

நாக பூஷணர் இடமு றைந்திடு
தேவி பார்வதி திரிபுர சுந்தரி
நார ணிபெரு நலமுலை துணையே
என் ஞேதவே ஜய – ஜய

தகிட கிடதரி திகுட தகுமென
சகல பரதமும் நடன மிசைகொடு
சபையிலுறை பொன்னம் பலவருந் துணையே
யெந் நாளுமே ஆ - ஆ

சகல கலையுந்தன் னுடைய நிதி யென்று
அமரர் முனிவர்கள் பரவு சுமங்கலி
சரசு வதிவந்து நடனமும் செய்வளே
யென் னுவிலே ஜய - ஜய

குகனை அரிமரு மகனைக் கிரவுஞ்சக்
குவடு பொடிபட அயிலை விடுகின்ற
குமர குருபர சரவண பவனே
அருள் கூரவே ஆ - ஆ

சகல தமிழ்நெறி குறுமுனி யறிந்து
சரண மெனவருள் முருகப் பெயர்கொண்ட
தகைமை மேலவாசல் சுப்பிர மணியரே
குரு சுவாமியே ஜய - ஜய

அப்பர் சுந்தரர் வாத வூரரை
எப்ப வுந்துதி செய்துயா னிந்த
அற்பு தம்பெறு வாணிநா டகமே
பாடி ஆடவே ஆ - ஆ

சுப்பிர மணியர் உருக்கொ டும்பரா
சத்தி தந்த முலைப்பா லுண்டருள்
சொற்ப யின்றசம் பந்தரைப் பணிவேன்
நீடு வாழ்கவே ஜய - ஜய.

## மங்களம்

தரு. இராகம் : சுருட்டி. சாப்புத்தாளம்.

### பல்லவி

மங்களம் மங்களம் – மருதவாணு
மங்களம் மங்களம்

### அநுபல்லவி

மங்கை பங்கனே மதியை அணிவோனே
மருதின் நீழலில் மருவி யுறைவோனே (மங்கள)

### சரணங்கள்

சோழன் பாண்டி யன்வினை தீர்த்துஞ் சுந்தரர்க்காய்ச்
சொந்தமாய் நடந்த விந்தைபொற் பாதா – நல
தோத்திரச் சொல்லிசை சேர்த்துமூ வர்துதி
சாத்துவார்க் கருள்திரி நேத்திர நாதா

தொந்த மாம்வினைக ளைந்தயெம் பெரும
சுருதி சொலுவோனே மருதூர் வளர்வோனே
(மங்கள)

வெள்ளிமா மலையைக் கிள்ளியே யெடுக்கத்
துள்ளி ஒடிவரும் கள்ளனைவெல் கழலாளா - அவன்
விள்ளு தோத்திரம தெள்ளலில் லாமலே
உள்ளங்கொண் டருளும் வள்ளல்வாம தேவா

மத்தமொடு கூவி ளத்தையணி வோனே
மருவள ருங்கொன்றை நிறைசெஞ் சடையோனே
(மங்கள)

மாலயன் பணிசெய் சீலமுள்ள நல
 சூல பாணியான வேலவன் தாதா — கால
காலனே அடைந்த பாலனுக் கருள்செய்
 நீல கண்டசிவ பாலேம ணுளா

மங்க ளப்பெரு நலம கிழ்ந்திடத்
தங்கு மாமகா லிங்க மூர்த்தியே. (மங்கள)

வசனம்

நொண்டி, ஸ்ரீ ஏகநாயகர் எழுந்தருளிய சபையின்கண் வந்து துதித்தல்.

விருத்தம்

மாதிரமெல் லாந்துதிக்கும் மகர மென்ற
 மதியினிலே தேவரிடி மனிதர் போற்ற
வேதிங்கட் பூரணையிற் பூச நாளில்
 மேன்மையுள்ள கல்யாண தீர்த்த மாடிப்
பூதியணிந் தன்புசெய்தேன் வினைக ளெல்லாம்
 போக்கினேன் பரகலியை நீக்குந் துய்ய
சோதிர்மய மகாலிங்க சிவமே யென்று
 தோன்றினுன் நொண்டிவந்து தோன்றி னனே.

தரு - இராகம் : சங்கராபரணம். ஆதி தாளம்

*தானத்தோந் தானத்தோந் தானு — தானத்தோந்*
*தானத்தோந் தானத்தோந் தானத்தோந்தானு*

மருதூரில் மேவுமகா லிங்கம் — அருள்
 வாரி யகண்டபரி பூரண லிங்கம்
பெருநல முலேமருவு லிங்கம் — அன்பர்
 பேதமையெல் லாமகற்றும் சோதிர்மய லிங்கம்

ஏகநாயக ருதிக்கும் லிங்கம் – சம்பு
யிறையவர் பூதநாதர் கறைக்கண்ட லிங்கம்
நாகபூஷணப் பிரதாப லிங்கம் – கண
நாதராண்ட பிள்ளைபணி வேதரூப லிங்கம்
சாமவேதம் பொருந்தும் லிங்கம் – ஞான
சச்சிதா னந்தமென்ற உச்சிதமாம் லிங்கம்
சோமசேகர ருத்திர லிங்கம் – முன்னாட்
சோழன் வினையகற்றி வாழ்வுதந்த லிங்கம்
வரகுணன் பணிந்துபோற்று லிங்கம் – நித்தம்
மாலயன் வந்தனைசெய்யும் சூலபாணி லிங்கம்
தரணியெல்லாம் துதிக்கும் லிங்கம் – பண்டு
தகுமேதைப் பூசமாடத் தகுமென்ற லிங்கம்
தகுமென்ற மகாலிங்கரைப் போற்றி – பொன்னி
தன்னிலாடி விபூதி யுன்னதமாய்ச் சாற்றி
மிகுந்த சிவமந்திர உருவேற்றி – நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே

[நொண்டி தன்னை அணிசெய்துகொள்ளுதல்.]

குளிசக்கயிறு கையில் மின்ன – ரசக்
குளிகை முத்தாரமார்பிற் பளபள வென்ன
வெளியி லெவருங் கிடுகிடென்ன – நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே
கையினில் வாங்கு சூரிகொண்டு – ஒரு
கையினில் முல்லைமலர்ச் செய்யவதின் செண்டு
மெய்யதொன்று சொல்லி நயங்கண்டு - நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே
நெற்றிதனிற் பொட்டு மட்டாய் - இட்டுநவ
ரத்தின முருகுகாதி லுற்றசேர்வை யொட்டு
வெற்றியாங் தங்கக் கடுக்கனிட்டு - நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே

பொன்சரிகைப் புள்ளி உருமாலை – வாகைப்
பூவணிந்து கட்டியுள்ளே மேவுமிந்திர சாலை
விஞ்சைசூலி யொன்றை வைத்துக் காலை – நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே

எந்தையே பிரானே யென்றுகூடி – மன
தேக்கமெல்லாந் தீர்க்கும் பஞ்சாக்கரத்தை நாடி
விந்தையாய் அனந்தகவி பாடி – நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே

வாசமுள்ள கெந்த மார்பிற்பூசி – நற்சவ்
வாதுப்பட்டை திமிர்ந்து மாதுரியம் பேசி
மீசையை முறுக்கிக் கையைவீசி – நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே

மனத்து ளனுதினமுந் தோணி - நல்ல [திராணி
மார்க்கஞ்செய் பெரியோர்கள் ஏற்கும் அன்பன்
வினையஞ் செய்வோர்கள் மார்பிலாணி – நொண்டி
விளம்பரஞ் சபையிலாட விருதுகட்டி னேனே

தக்கதிருச் செந்தூரில் நொண்டி – வெகு
சாத்திரத்தைப் பார்த்துகந்த சாத்தூரின் நொண்டி
மிக்க திருப்பழனி நொண்டி – இன்னம் [நொண்டி
வெற்றிபெற்ற தென்தலத்தில் குன்றக்குடி

திக்கதனிற் கீர்த்திதானே மண்டி – எதிர்
திருக்கத்தை உருக்கிய திருக்கச்சூர் நொண்டி
பக்கிரிவேட மெடுத்த பேரும் – வெகு [பேரும்
பட்டணத்தைத் தெட்டியங்கே கட்டுப்பட்ட

பக்கலன்றிப் பாதை தெரியாமல் – ஆரும்
பழிக்கக் குழவிக்கள்ள முழிமுழித்த பேரும்
சிக்கிக் கொண்டு காலறுபட் டோரும் – வசை
செய்ய அங்கேமை யழிந்து பொய்யதான பேரும்

குக்கலெனவே யலைந்த பேரும் – வேசிக்
கொண்டியர்க்குட் சண்டையிட்டுத் தொண்டு
இக்குவலயத்தில் வெகு பாடு – பட்ட [பட்ட பேரும்
ஏழைச் சபைக் கோழையவர் மோழைமதிதானே
உக்கிரச் சிங்கேறு வீர நானே – மையை
ஒட்டி ரெத்தினப் பொட்டி தூக்கக் கெட்டிக்
அக்கினித் தம்பப் புலியும் நானே - பூசம் [காரன்நானே
ஆடியே கால் கூடியிசை பாடிவரும் நானே
தானத்தோங் தானத்தோங் தானு.

வசனம்

இவ்வாறு துதிசெய்த நொண்டியை அவ்வவை யின்கண் உள்ள சிவனடியார்கள் நீர்யாரென்று வினவ அவர்கள்முன் தன் பிறப்பின் வரலாறு கூறுதல்.

விருத்தம்

கூறுமென் ஊரும் பேரும்
குணமுள்ள தந்தை பேரும்
மீறும்நான் பிறந்தா ளாகி
வெளியிலே வந்த பின்பு
தேறும்நற் றலங்கள் கண்டு
சேவிக்க வினைகள் தீர்ந்த
வாறுமிச் சபையின் முன்னே
வகைதுகை புகலு வேனே.

தரு - இராகம்: புன்னுகவராளி - சாப்புத்தாளம்

*தனனு தனதனனு - தன*
*தனுதனுதன தானுதன*

[ நொண்டி தன்னூட்டுவளம் கூறல் ]

பூமா துறைந்திடும் நா — டுயர்
பொன்னு முத்துங் கண செந்நெலுடன்
தேமாப் பலாக் கதலி — வளஞ்
சேர்ந்திடுமே மனம் கூர்ந்திடுமே
மேன்மையான வீசங்க — நாடதின்
மிக்க கள்ளச் சாதி தக்கபுகழ்
பான்மை யுள்ள இந்திரகுலம் — மெத்தப்
பாங்குள்ளதே விருதாங்குள்ளதே
உள்ளதே புலிக் கொடியும் — வாகை
யுந்தண்ட மாலைவி சித்திரமுங்
தெள்ளிய குஞ்சுநிதியாங் — கெடிச்
சிங்கந் துவாகுடி யின்கட்சியின்
கட்சி யம்பலம் ஒன்பதுவும் — இளங்
கட்சி பதினெட்டில் மெச்சி வரும்
உச்சித முள்ள யென்தகப்பன் — பேரை
ஊரினிற் சொல்லுவார் சூர ரெத்தினம்
சூரனென்ற பேர் வாயும் — இப்போ
சொன்ன விலை பெறும் நன்னயமாய்
வீரன் தவத்தில் வந்தேன் — கெடி
வீரச் சிங்கனென்று பேரு மிட்டான்
பேரிட்டா னுரிமை யதாய் — ரெத்தினப்
பிள்ளை யவ னென்றே உள்ளபடி
ஆரியகுரு தன் னிடத்தில் — வய
தஞ்சிற் படிக்கவும் ரஞ்சிதமாய்

[ நொண்டி தான்கற்ற கல்வியைக் கூறல் ]

ரஞ்சித முடனே வைத்தான் — நானும்
நல்ல கிரந்தமும் சொல்லுந் தமிழ்

மிஞ்சு கன்னடந் தெலுங்கு – மோடி
மிக்க சிறப்பாந் துலுக் குடனே
துலுக்கும் இது களிலே – சுயஞ்
சொல்லும் திறமைக்கி வல்லமை யாய்
பலுக்குஞ் சங்கீ தங்களும் – எல்லாம்
பனிரண்டு வயதுக்குட் புனிதமதாய்
புனிதமா யிது நடுவே – சில
போதைக் குள்ளே சிலம் பாதிகளும்
இனிய பரி யேற்றமும் – ஆனே
ஏற்றமும் விற்பூட்டும் சாத்தி ரங்கள்
சாத்திரங்கள் கற்றுக் கொண்டேன் – லாட
சன்னுசி தாளொருவன் முன்னிலையாய்
ஆத்மா வசியங்களும் – வெகு
மந்திரமுங் கன தந்திரமும்
தந்திர விலங்கு பூட்டுந் – தாளும்
தான்தெறி பச்சிலை நானறிந்தேன்
இந்திர மகேந்திர சாலம் – முதல்
எட்டுக் கருமமும் சட்டமதாய்ச்
சட்டமான செப்படியும் – குட்டிச்
சாதி வித்தையும் வினேதவித்தைத்
தெட்டுகின்ற எத்துகளுஞ் – சூதுந்
திருட்டும் அவதானப் பெரட்டுகளும்
பெரட்டும் எதிரியை வாய் – கட்டிப்
பேச்செடாமற் செய்வேன் ஆச்சரியஞ்
சரட்டென்று கன்னமிடுங் – கோலுந் [டேன்
தான்கொடுத்தான் தந்தை வாங்கிக்கொண்
கொண்டேன் துரைக்குட்டி நான் – அந்தக்
கூத்தப்பாவின் மாமன் காத்தக் குட்டி

[ நொண்டியின் மணவினை நிகழ்ச்சி ]

கண்டே வலுவிலழைத்து – அவன்
கன்னியைக் கல்யாணம் உன்னதமாய்
உன்னத முடனே செய்யச் – சொல்லி
யுங்கனவான் கச்ச மங்கலத்தில்
வன்னிய முண்டன் தன்னிடமாய்ச் – சேதி
வந்தது யேனினிச் சந்தேகமோ
சந்தேக மில்லைக் காணும் – எந்தன்
தந்தை வெகுசனச் சொந்த முள்ளோன்
சிந்தை கூர்ந்திடக் கூட்டிக்கலி – யாணஞ்
செய்ததில் மொய்ப்பணம் ஐநூறுடை
பணமாத்திர மல்லக் காணும் – இன்னம்
பச்சை நவரத்தின உச்சிதங்கட்
கிணையான ஆபரணம் – தஸ்திரம்
யெண்ணி யெழுதினர் தொண்ணூறுபேர்
தொண்ணூறு நாளொருநாள் – போலே
சுகமாய் நடந்தது மிகவரிசை
கண்ணுடி உட்புறத்தில் – அந்தக்
காரிகையும் நானும் சீருடனே
சீராய் விளையாடிக் – கட்டிச்
சேர்ந்துமணைந்துகங் கூர்ந்துகொண்டோம்
ஓராறுமாதம் வீட்டில் – இருந்
துற்பனமாய்க் கன விற்பனநான்
நானே வெகுதலங்கள் – சேவிக்க
நாடினேன் கூட்டாளி தேடினேனே
மாறுபரன் குணவான் – தள
வாய் மண்டபத்தினில் நேயமுள்ள
நேயவான் சன்னுசிக்கி நான் – ஒரு
நீட்டோலை விட்டேனே வாட்டிதென்று

தாயக முடனேவந்து — கண்ட
தாட்டிகன் யோசனை கேட்டேனே

தனனு தனதனனு தன.

வசனம்

நொண்டி திரிசிரபுரம் முதலிய தலங்களைத் தெரிசித்துத் திருவையாறு அடைந்தமை கூறல்.

விருத்தம்

கேட்டது மிகவும் நன்றே
கெடியுள்ள வீரச் சிங்கா
நாட்டினிற் கீர்த்தி பெற்ற
நல்லதோர் தலங்க ளெல்லாம்
காட்டுவேன் சேவை செய்யக்
கையினில் திரவி யங்கள்
மூட்டைகள் வேணு மோதான்
முதலென்ன கன்னக் கோலே.

தரு. இராகம் : ஆனந்தபைரவி. ஆதிதாளம்

*தனனு தனனு தன — தனனு தனனு தன*
*தானுதனு தனன தா னுதன*

[நொண்டி சிவதலங்களை வழிபடல்]

முதலென்ன நம்முடைய தந்தை சம்பாரித்ததை
மூட்டைகட்டிப் போவது தேட்டல்லவே
சுதனென்று பிறந்தவன் தானே திரவியங்கள்
தொகுத்துத் தேடுவதிந்தச் செகத்தினிலே
செகத்தினிற் புகழ்மிக்க பெருமையுள்ளது தான்குல
தெய்வமுண்டு நமக்குப் பொய்யலவே

அகத்திற்பல யோசனைசெய்ய வேண்டா மென்றந்த
அச்சா சொன்னத்தைக் கண்டு மெச்சினேனே

மெச்சியிருவஞ் சித்திரை மாதந் தன்னில்
வேதியன் சொன்ன தஞ்சாங் தேதிதன்னில்
உச்சிதமுடனே நானுங் குளிகை மைதிலதங்கள்
உயர்ந்த கன்னக் கோல்கொண்டு செயம்பெறவே

செயம்பெறவேணுமென்று கூத்தப்பால்மருதப்பாரைத்
தெண்டம் பண்ணிஞேம் நாங்கள் ரெண்டுபேருஞ்
சுயசூர ஞமென்று பயணமாய் முன்னம்முனி
சுரர்கள் வந்தனஞ் செய்யும் சிரகிரியிற்

சிரகிரி செவந்தீசர் மட்டுவார் குழலியம்மன்
தெரிசனம் செய்துகொண்டோம் ஒருமையதாய்த்
தரணிபுகழும் ஆனைக் காவலிற் செம்புலிங்க
சுவாமி தரிசனமும் நேமமதாய்

நேமமாய்ச் சுக்கிரவாரம் அகிலாண்ட வல்லிஞான
ரெத்தின தரிசனமும் பத்தியுடன்
வாமி கெவுரியம்பா கிருபைசெய்து ரெட்சியென
வணங்கிப் பின்னடைங் தோமே குணம்பெறவே

குணமிக்க உபயகா வேரி நடுவிற்பள்ளி
கொண்ட திருவரங்கர் கொண்டல் வண்ணர்
மணமுள்ள துளசியின் மாலையணியும் அரி
வாசு தேவரையும் மீசுரமாய்

மீசுர மாகிய சீரங்கந் தன்னில்வந்து
விஞேதம் ஒன்று செய்தேனே மஞேபிலஞய்
காசென்னசெம்புக் காசைப் பச்சிலைமுடுக்கில் தங்கக்
காசாக்கிச் செட்டி கையில் வாசனையாய்

வாசனையுடன் கொடுத்தும் ஒருநூறு தங்கக்காசு
வாங்கினேன் முன்னூறு பொன் பாங்குடனே

தேசம்புகழும் ரெங்கர் கோயிற் சென்றுபணிந்து
சீதர கேசவனே மா தவனே
மாதவ நந்தகோப நந்தன முராரி ராம
மண்டலம் அளந்தமாலே விண்டுகின்பொற்
பாத மறவேனையா கருணைவைத் தாளுமென்னைப்
பார்த்தசாரதி கிருஷ்ணமூர்த்தி யென்றும்
மூர்த்தியென்று பணிந்து காணிக்கை நூறுபொன்னை
முடிப்புக்கட்டிக் கொடுத்துத் தெண்டனிட்டேன்
கீர்த்திகண் டோடிவந்த தலத்தாருக் கன்பதுபொன்
கிழி கட்டிக் கொடுத்தேனே முழுமனதாய்
மனதின் தாராளத்தைக் கண்டானே யெந்தன்கூட
வந்தவன் மெச்சிமெச்சிச் சிந்தைகூர்ந்தான்
தனத்தைத் திரணமென்று பார்த்தாயே தம்பி வேசி
தனத்திற் சிக்காதே சொன்னேன் கனத்த புத்தி
புத்திமான் நானென்று சன்ஞசியுடன் கூடிப்
புத்தி மகிழ்ந்து அரவிந்தம் ஏலும்
உத்தம சீலியில் மேவும் கோபாலசுவாமியவர்
உலகளந்தவர்வாழும் தலம் பணிந்தேன்
பணிந்தபின் தோவூரிற் பிரசன்ன வேங்கடாசல
பதி அலமேலு மங்கை பதிபதமும்
வணங்கிக் கல்லணைவாழும் சஞ்சீவிராய செய
வல்லவரைப் பணிந்து செல்லும் போது
செல்லும் பொழுதிலோர் நாகப்பட்டணஞ் செட்டி
திரவியக் காரனொருவன் பரபரப்பாய்க்
கல்லுமுத்துவயிரந் தங்கங்கொண் டொருவன் பாக்கின்
கசிவுந் தலைத்துலுக்கும் அசுப்பிற் கண்டோங்
கண்டோமிரண்டு பேரும் வாட்டு வாச்சுதென்று
கறுப்பான வாடைப்பொடி சுறுக்குமெத்த

அண்டியவன் மேல்வீசி நாலடி நடக்குமுன்
அந்த மூட்டையைக் கையில் தந்துவிட்டார்
தந்துவிட்டவன் முன்போல் நடக்கிறனே யந்திர
சாலவித்தையைப் போல மேலு முண்டோ
முந்தி நடந்துநாங்கள் கோவிலடி கும்பிட்டு
மூவர் பாடும் ஐயாறு மேவினேமே

தனனு தனன தனதனனு தனன தன.

வசனம்

நொண்டி திருவையாற்றிலிருந்து திருக்குடந்தை சென்று ஸ்ரீ கும்பேசுரரைத் தரிசித்து ஓர் தாசியைப் புணர்ந்தமை கூறல்.

விருத்தம்

ஆதிமுதல் நடந்தவகை விபரஞ் சொன்னேன்
ஐயாறு சுவாமிமலை கண்டு போற்றி
மேதினியிற் புகழ்பெருகும் கும்ப கோணம்
மேவியங்கோர் வேசிசெய்த வினைய மெல்லாம்
பாதிமதிக் கங்கைகொன்றை தும்பை சூடிப்
பணிபூண்டு கடுவுண்ட மருத வாணர்
சோதிர்மய மகாலிங்கர் சபையின் முன்னே
சொல்லுவேன் வினைகளெல்லாம் வெல்லு வேனே.

தரு - இராகம் : சங்கராபரணம். ஏகதாளம்

*தனனு தனதனு தனனு*
*தனன தனனதன தனதனனு*

திருவை யாறு தனிற் - காவேரி
தீர்த்தங்க ளாடினேன் கீர்த்தி பெறத்

தர்மசம்வர்த்தனியை — ஒருபாகம்
தன்னில் வைத்த ஐயாறப்பர் சந்நிதியில்
சந்நிதி தனிலே சென்றேன் — தோத்திரம்
தான்பயின்றேன் நன்றாய் நான் பணிந்தேன்
பொன்னொரு நூறு பெறும் — முத்துச்சரம்
போட்டேன் நல்லவழி காட்டு மென்றேன்
காட்டுமென்று வழி நடந்தேன் - சுவாமிமலை
கடுகி வந்தேன் கோயிற்படி யேறினேன்
நாட்டினில் புகழ்பெருகும் எங்கள் சுவாமி
நாத குருபரனைப் போத முடனே
உடனே அடி பணிந்தேன் — வேலோனை
ஓராறு முக னையுஞ் சீராக
விடை கொண்டு நடந்தேனே — கொட்டையூர்
மேற் காவேரி கடந்தேன் தீர்க்கமதாய்த்
தீர்க்க முள்ள காவேரி — புண்ணியஞ்
சேருந் தலமி தென்று பேர்பெருகும்
மார்க் கமும் எந்தன் கூட — வந்தவன்
வகைதுகை சொன்னதின் மகிமை கண்டேன்
கண்டேன் கும்பகோணம் — ஓகோகோ
காசிக்கு இது மெத்த மீசுரமாம்
எண்டி சையும் புகழும் — பகவன்
ஏற்கும் படித்துறையின் மார்க்கம் வந்தேன்
வந்தேன் வெகு புண்ணியம் — அடடா
வாச்சுதென்றேன் பாவம் போச்சுதென்றேன்
முந்தி முந்தி நீராடினேன் — குருசொன்ன
மொழிப்படி செபம் பண்ணி வழியுடனே
வழியுள்ள டபீர் சுவாமி — அக்கிரகார
மார்க் கத்தில் யானையடி யேற்கும் அய்யன்

பிழைபொறுத் திடுமவரைக் — கும்பிட்டேன்
பின்பவ்விடம் விட்டு அன்புடனே
அன்புடன் மாமகத்தில் — எல்லோரும்
ஆடுகின்ற தீர்த்தத்தில் ஆடினேனே
தென்புடன் சுற்று மிருக்குஞ் — சோடச
சிவலிங்க தெரிசன தலமிதென்று
தலமென்று நான் பணிந்தேன் — விசுவநாத
சுவாமியையுந் தொழுதேன் நேமமதாய்க்
குவலயம் போற்றுகின்ற — நாகேசர்
கோயிற் சென்றேன் பணிந்தே யின்னமும்
பணிந்தேன் சோமேசர் — சாரங்க
பாணியையுஞ் சக்கரபாணியையுங்
குண முள்ள சர நாரணர் — அனுமார்
கோதண்டம் பெற்ற ரெகு நாதரையும்
நாதாந்த ரென்று பணிந்தேன் — மங்கள
நாயகி யம்மனுக்கு நேயமுள்ள
வேதாந்தப் பொருளரனர் — கங்கையணி
வேணியர் சிவ சம்பு ஆணிப் பொன்னர்
ஆணிப் பொன் னம்பலவா — முன்னாளில்
அகத்தியர் கும்பத்தில் மகத்துவமாய்க்
காணியென்றே குடந்தைப் — பதிவந்த
காரண ராம்பரி பூரணராம்
பூர்ண கும்பேசர் — கோயிலிற்
போனேன் பிரகாரம் மூன்றுதரஞ்
சேரவே சுற்றிவந்தேன் — சந்நிதியிற்
சென்றேன் தெண்டனிட்டேன் நன்றாக
நன்றாக வில்வார்ச்சனையும் — அபிஷேக
நைவேத்திய முடனே நெய்விளக்கும்

அன்றைக்கே செய்வதற்கு — நூறுபொன் [தேன்
அண்ணுக் குருக்கள்கையில் எண்ணிக் கொடுத்
கொடுத்தந்தப் படிசெய்வித்தேன் - தலத்தாருங்
கொண்டாடி யென்னைவந்து கண்டார்களே
தடுத்தோ சொல்லுவது நான் — அவர்வைத்த
தமுக்கினி லெண்பதுபொன் கமுக்கமதாய்க்
கமுக்கமாய் வைத்துக் கொடுத்தேன் — கூடவந்த
கள்ளச் சன்னுசியவன் மெள்ள மெள்ளென்ருன்
நமக்கின்னம் வெகுதலங்கள் — சுற்றவேணும்
நாளைக்கு வேண்டாமோ வேளைபாரென்ருன்
பார்ப்பதென்ன போபோ என்றேன்—கோபங்கொஞ்சம்
பண்ணினே னவனதை எண்ணிக்கொண்டானே
சேரிடம் அறிந்து சேரென்று — அவ்வையார்முன்
செப்பினது நிசமிது உற்பன மென்று
என்று என்னை விட்டுப் பிரிந்து — சொல்லாமல்
ஏகிஞ னெங்கையோ போகிஞனே
நன்றுநன்று என்று சொல்லியான் — அன்றைக்கு
ராத்திரி கும்பேசரைப் போற்றவென்று
போற்றவென்று கோயில் சென்றேன் — தெரிசிக்கும்
போதிற்கண்டேன் வேசி மாதர்களைப்
பார்த்தபடி பேர் சொல்கிறேன் — மங்களம்
பச்சை முத்துச் சிவகாமி லெட்சுமிப் பொன்னுள்
பொன்னுள் சவுந்தரியும் — ஞானவல்லி
பூமாலை காமாட்சி ராமாமணி
கன்னுள் கமல முத்து — அம்மைமுத்துக்
கல்யாணி அம்புசம் நல்லமுத்து
நல்லமுத்துச் சந்திர வதனுள் — தங்கமுத்து
நாகாம்புசம் ரெங்கம் ஓகோகோ

செல்லி வள்ளி ரூபாவதி – விசாலாட்சி
செங்கமலம் வாடாமுலை மங்கை தையாளுந்

தையாள் பாலாளும் – வசந்தாள்
சரச சிகாமணி பெரியநாயகம்
ஒய்யாரி அலமேலு – அபிராமி
உற்பன முள்ளவளாஞ் சுப்புரெத்தினம்

ரெத்தின பரணப் பெண்கள் – இவரெல்லாம்
நகநக வென்று வருந் தகைமை கண்டேன்

[நொண்டி தங்கமுத்துநாட்டியம் காணல்]

பத்தியுள்ள மண்டபத்திலே – மேளங்கூட்டிப்
பாடினுள் தங்கமுத்து ஆடினளே
ஆடிய கேளிக்கையைப் – பார்த்திட
ஆயிரங்கண் வேணும் ஞாயம் சொன்னேன்
கூடு துத்திப் புல்லாங்குழல் – மத்தளங்
குணங் கொண்டு தாளமும் இணங்கியதே
இணங்கிய வரிசை கண்டேன் – அடவுகள்
எத்தனைவிதமோ தங்கமுத்துப் பிடித்தாள்
வணங்கிய அபிநயத்திற் – கைபிடிக்கும்
வரிசையும் பதம்பாடும் பெருமைகளும்
பெருமை பெறு மேனகையோ – ரம்பையோ
பேராம் உருவசியோ ஆரோவென்றேன்
அருமை யறிந்து நானே – பார்க்கின்ற
அசைப்பைக் கண்டாள் மெத்தப் பசப்பினளே
பசப்பி நடனஞ் செய்தாள் – மங்களம்
பாடிப்பின் எல்லோருங் கூடினரே
அசைப்புடன் கொங்கைக் குலுக்கும் – புன்சிரிப்பும்
அன்ன நடைநடக்கும் உன்னதமும்

உன்னத முடனே நடந்தாள் – நான் அவளை
ஒட்டிக்குப்போலவே கிட்டி நடந்தேன்
பொன்னு பரணமுடனே – தங்கமுத்து
பொன்முகப்பு மாளிகையில் நன்மைபெறவே
நன்மையுடன் போய்ப்புகுந்தாள் – பாங்கியை
நாட்டி விட்டாளென்னைக் கூட்டிவர
முன்முகப்பு வாசலிலே – நான்நின்ற
முழக்கங் கண்டா ளந்தக் கழுக்காணி
கழுக்காணி குட்டைச் சிறுக்கி – யென்னைவந்து
கண்டாளே யெந்தவூரென் றண்டியண்டியே
மழுப்பி மழுப்பிப் பேசி – யிங்கேநீர்
வந்த காரிய மென்ன முந்தவே யென்றாள்
முந்திநான் சொல்வதென்ன – உங்கள்தங்க
முத்துவுக்கு நித்தமொன்றுக் கெத்தனைபணம்
வந்தவரை அழைப்ப துண்டோ – ஆரேனும்
வைப்புவைத் திருக்கிறாளோ எப்படியென்றேன்
எப்படியென் றிடும்போது – மாதுக்கு
இருநூறுபொன் கிழவிக் கொருநூறுபொன்
தப்பாம லெனக் கன்பது – பொன்னுநீர்
தந்தா லழைக்கவென்ன சந்தேகமோ
சந்தேக மில்லை காணும் – சொன்னபணம்
தந்து வருவீரென்றால் வந்திடுமென்றாள்
அந்தட்சணந் தங்கக் காசு – நூற்றிருப
தையாபத்துப் பொன்னேறப்பையிற் கட்டினேன்
கட்டிக் கொடுத்தனுப் பினேன் – உள்ளிருந்து
கண்ணியென் றொருத்தி செம்பில் தண்ணீருங் [கொண்டு
எட்டி நடந்து வந்து – துரைசாமி
இங்கே வரலாமென்று வங்கணமுடன்

வங்கணமாய்ப் பாதம் விளக்கிக் – கைலாகு
வரிசையுடன் கொடுத்த அருமைசொல்லவோ
வெங்கி விளக்குப் பிடித்தாள் – வீரிபாக்கு
வெற்றிலைதந்தாள் படிக்கம் பெற்றிபிடித்தாள்

தாள் நோகுமென்று பாவாடை – விரித்தாள்
தயிலி மெத்தமெத்த ஒயிலாக
சோணாடு கும்ப கோணம் – அதில்வந்த
சுகிர்தம் பலித்ததென்று மகிமைகண்டேன்

மகிமையுடன் உட்புறத்திலே – சப்பிரகூட
மஞ்சத்திற் போயிருந்தேன் ரஞ்சிதமாய்த்
தகைமையுள்ள தங்க முத்துவும் – கையினிற்
தம்புருவும் பூரண கும்ப முலையாள்

பூரண கும்பங் கொண்டவள் – காணவந்த
புதுமையுங் கும்பிட்ட விதமுங் கொண்டேன்
தெரிந்தேன் தங்க முத்துவை – மஞ்சத்திற்
சேரவிருத்திக் கொண்டேன் பேர்பெறவே

பேர்பெற்ற காரிகையாள் – கொஞ்சிக்கொஞ்சிப்
பேசினுள் நான்செய்த பூசைநல்லதே
சீர்பெற்ற துரையம்மை நான் - கண்டு சைகை
செய்தேனே மண்டபத்திற் பொய்யல்லவே

வேளுக் கிணையாம் உம்மையே – கொண்டுவந்து
விட்டார் கும்பேச ரெங்கள் இட்ட தெய்வமே
தோளின் இடது பக்கத்திற் – துடித்ததுஞ்
சோதிடம் அறிந்த நல்ல வேதியரெந்தன்

எந்தன்கை பார்த்துச் சொன்னதும் – கம்பளத்தான்
இறையோனைப் போலவந்து குறிசொன்னதும்
இந்தக் குறிகள் நல்லதே – சுக்கிரவாரம்
இன்றைக்கு வந்ததுவே நன்று நன்று காண்

காணுது கண்டது போல — வந்த எந்தன்
கண்ணுளனே யென்று விண்ணுணமாய்ப்
பூணுர முலை மாது — ஆடைவலை
பூட்டியே தம்புருவை மீட்டினளே
மீட்டியே கும்பநாதர் — குறவஞ்சி
வேடிக்கை பாவநாசம் பாடினதும்
நாட்டினிற் புகழ் பெருகுஞ் — சீனிவாசன்
நவிலும் பச்சைப் பதக் கவிதைகளும்
கவிதையாம் ராமாயணப் — பிரபந்தத்தைக்
கருதி நாடகஞ் செய்த அருணுசலக்
கவிராயர் பதமும் இன்னங் — கற்பனையாம்
கலிங்கத்துப் பரணியுந் தெலுங்குப்பதம்
தெலுங்கும் மாராட்டகமும் — இந்துஸ்தானி
சிங்காரமாந் துலுக்கு இங்கிதங்கள்
நலம்பெற்ற கியால்வகையும் — பாடின
நங்கைக் கிப்பேருள்ளது தங்கந்தங்கமே
தங்கமாகும் நூறுபொன்பெறுஞ் — சந்திரஆரந்
தானே யவட்குப்பூட்டி மானே யென்றேன்
சங்கீத மேனகையென்றேன் — மகிழ்ந்தேனே
தாய்க்கிழவி வந்தாளே பாக்கிய மென்றே
தாழக்குனிந்த முதுகும் — நடுக்கிய
தலையும் முழங்கால் தொட்ட முலையுடனே
பேழைவாய் ஊழ மூக்குடன் — வெகுமாயப்
பொடிக்காறி கையிலொரு தடிக்கம்புமாய்த்
தடிக்கம்பை ஊணிக்கொண்டு — குத்திருமல்
தாங்காமல் பெருமூச்சை வாங்கியேங்கியே
நடுக்கியே நாணிக் கோணியும் — பின்னுமந்தத்
தாய்க்கிழவி யென்னை அன்பாய்க் கண்டனள்

பாக்கியம் பெற்ற துரையே – உம்மைவரப்
பண்ணிய கும்பேசரெங்கள் கண்ணுதலார்
நோக்கியே கிருபை செய்குவார் - வயதுமக்கு
நூறு தெட்சணப்பல்லி கூறுதிதோ

தோகையென் மகள் பிறந்த – நாளினிற்
சுக்கிரனுச் சமதாகும் மிக்கபலனே
காகமும் ஆந்தைக் காதலும் – அறிந்திடும்
காத்தபெருமாள் முந்தா நாத்துச்சொன்னன்

சொன்னது நேற்றிரவில் – நான்கண்ட
சொற்பனமும் மெய்யாகும் உற்பனமிதே
என்னுடைய மகள் சிறியாள் – இவளின்னம்
ஏதும் அறியாள் வீணே சூதையறியாள்

சூது பரத்தையரைப் போற் – பலபேரைத்
தொட்டும் அறியாள் பணந்தெட்டியறியாள்
மாதுமாமாலம் அறியாள் – இருவரும்
மகிழ்ந்து கலந்திருங்கள் சுகமாயென்றே

என்று மகளுக்குச் சன்னைகள் – சொல்லிமாமி
எகினள் மெய்யென்றுரைசை யாகினேனே
நேராய்க் கிழக்குப்பார்த்த – வீட்டுக்குள்
நிலைக்கண்ணுடி சிறந்த துலக்கங்களும்

பேரான சித்திர வரிசை – அதில்நல்ல
பெண்ணும் ஆணுங் கூடிய வண்ணங்களும்
வண்ண மணிவிளக் கேந்தும் – பதுமையும்
வாய்ந்தவிசரி வீசுஞ் சூத்திரங்கள்

பண்ணிய வெள்ளிப் படிக்கம் – மிகமிகப்
பாங்குள்ள வீட்டினில் ஆங்குவர
வரவென்று மாதழைத்தாள் – தூங்குஞ்சப்பிர
மஞ்சத்தில் மெத்தையென்ன அஞ்சுவிதம்

அருகினிற் றிண்டு தலகா – ணியுமென்ன
ஆச்சரியஞ் சொல்லுவேன் பூச்சரங்கள்
பூச்சரந் தொங்கு மஞ்சத்திற் – சென்றிருந்தேன்
பூவையை வளைக்கையால் ஆவலுடன்
நாச்சமுங் கூச்சமுமென்ன – கிட்டவாடி
நாகரத் தினமேயென்று மோகமுடன்
உடனே பிடித்துக் கிட்டவே – யிருத்திக்கொண்
டொயிலாக யிருந்தேனே மெய்தானென்றே
திடமான தங்கத் தமுக்கிற் – பாக்குநன்ருய்ச்
சீவி யலகுபாக்குத் தேவையுள்ளதும்
உள்ளபடி வெள்ளித் தமுக்கில் – வெற்றிலையும்
உச்சிதமாய்ப் பொற்றகட்டில் விட்சிப்பூவும்
வெள்ளை மல்லிகைப் பூவும் – வெட்டிவேரும்
விந்தையான ஐவ்வாது தந்தச் செப்பினிற்
செப்பும் பவழக் கிண்ணத்தில் – சந்தனமுஞ்
சிந்தைகூர் குருபளிங்கிற் கெந்தபொடியும்
குப்பலாய் வால்மிளகும் – ஏலமதின்
கூடிக் கிராம்புடனே வாடையதாம்
வாடையான சாதிக்காயும் – பத்திரியும்
வாகா யொருதமுக்கிற் பாகமதாய்
நாடியே பீங்கானிற் – பன்னீரும்
நன்னயமாய்ப் பிடிசெம்பில் வெந்நீரும்
வெந்நீரும் பால்பழங்களும் – பாங்கியர்கள்
மெட்டாக மாமிவர விட்டவரிசை
அந்நேரம் அவடத்திலே – வைத்தார்கள்
அற்புதம் இதென்றிருந்தேன் விற்பனநான்
நானும் அவளுமிருந்தோம் – பரங்கியர்க்கு
நயனத்தாற் சைகைசெய்தாள் வயணமதாய்த்

தாமே யவர்களேகினர் — கதவுக்குத்
தாளிட்டு மங்கை நல்லாள் வேளும்ரதிபோல்
வேளும் ரதியைப் போலே — மஞ்சத்தில்
மெல்லியலை நான் கையாற் புல்லினேனே

நாளிது நல்ல தென்றே — யென்னுடைய
நயனத்திற் றங்கமுத்து நயனம் வைத்துச்
சசியுகந்து முத்தமிட்டு — நயமுடன்
பேசி யியலெழுப்புஞ் சேயமலர்

சேயமலர் மல்லிகை வெட்டி — வேர்களுடன்
சிறக்கக் குழல் முடித்து சிறக்க நன்றாய்
சிறக் கலவை பூசி — ஐவ்வாது
நேராய்ப் புனுகணைந்து தாராளமாய்ச்

சிறக்கநன் பாக்குக் கொடுத்தாள் — தாம்பூலஞ்
சேரக் கடித்துத் தந்தாள் காரிகையாள்
காரிகை கொஞ்சி மார்பிற் — படுக்கவுங்
கண்டேன் கனிவாய் ஊறலுண்டு அணைந்தேன்

வாரிறுக்கிய தனத்தை — மேலெழுப்பி
மலர்க்கையினுற் பிடித்து முலைக்காம்பைக்
காம்பை நெரடினேனே — மங்கைக்கிக்
காமவெறி மிகுந்து சோமனுரிந்தாள்

வீம்பு செய்யாதே யென்றாள் — அவளுட
மெல்லிடை உடை நெகிழ்த்தேன் சல்லாபமாய்ச்
சல்லாப ஆலிங்கனம் — அஞ்சுஞ்செய்து
சரசத்தில் சும்பனங்கள் கரிகரணம்

உல்லாச மான தலையிற் — கையழுத்தி
உந்தியில் மகரங்கீறிக் கந்தரத்தையே
கந்தரத்தை அணைத்துக்கட்டி — அமுதங்கிலே
கண்டுள்ளங் தான்வருடிக் கொண்டுவிரலால்

அந்த இடத்திற் சுத்தியே – பானமும்
அஞ்சு கரணமுஞ் செய்து கொஞ்சிக் கொஞ்சியே
ஏறிமதன் பூசையிலே – அந்த
ஏந்திழை மெச்சி மெச்சிச் சேர்ந்தனளே

சேர்ந்த நகக்குறிகளும் – பற்குறியுந்
தீர்க்கமாய் டொம்பர்தொழில் மார்க்கங்களில்
மார்க்கமுடன் இடசாரி – சுத்தியபின்
வலசாரியுஞ் சுத்தினள் கலவியினில்

தீர்க்கமாய்த் தாடனங்கள் – பளீரெனச்
செங்கைவளை கலீரென்கவுமே
கவுதாரி முதலான – எண்புள்ளோசை
கந்தரத்தி லெழும்பிட விந்தையாக

அவுது அவுது மேலுஞ் – சபாசு
அச்சாக் கலவியென் றுச்சாயமாய்
உச்சாய மாயவளுங் – கொக்கோக
உண்மையெல் லாமறிந்து வண்மையதாய்ப்

பச்சைப் பிள்ளைகள் போலே – மொழிகுளறிப்
படபட வென்றிரு துடைகளுமே
மேற்கொண்டு காம நீரால் – வெண்தரள
மெத்தையுங் கச்சும்மிதப்ப நித்திரையதாய்

ஏற்க நினைவு வந்து – மாதவள்
என்தலையைச் சுத்திக்கொண்டு முன்கதவைக்
கதவைத் திறந்து வெளியில் – வந்தவள்பின்
கருத்தாக நான் வந்தேன் திருத்தமுடன்

மதனநன் னீர்களெல்லாம் – பன்னீரால்
மாற்றியே நாகரிகம் வாய்த்திடவே
வாய்த்திடும் மங்கையுடனே – வந்திருந்தேன்
மஞ்சத்திற் செங்கைவளை மிஞ்சிநெரிந்து

மெத்தப்பொன் ஓலையொருபால் — ஒதுங்கியதும்
மிதமான மாலையது வதங்கியதும்
அதுவும் பவழமுத்துக்கள் — சிந்தியதும்
அங்கேகண்டென் சிந்தையை அங்கே வைத்தேன்

மதுரக் கனியிதழினுள் — ஓகோநீரும்
மன்மத நூற்படித்த செம்மையல்லவோ
உள்ளபடி சொல்லுவேன் கேளும் மாப்பிளைமார்
ஒருவராகிலு முன்னே மருவி யென்னை

மெள்ள வென்னைப் போகம் வரச்செய் — தவரில்லை
வீரஞ்சொல்லி அவர் காமநீரை முந்துவார்
முந்திவிட்ட பேரை யல்லால் — எந்தன்காமம்
முந்தச் செய்தபேரில்லை இந்தஇரவில்

வந்த புருஷன் நீரே — ஆண்பிள்ளை
வாய்த்த கலவிக் காணி யாட்சிநீரே
ஆட்சி யும்மை விடுவேனே — வேறொருத்தற்
காசை வையேன் பணமென்ன பாஷாணங்

தாட்சியுண்டோ உமக்குச் சொன்ன — சொல்லுந்தான்
தப்புமோ நானுமக்கு ஒப்பிவைப்பேனே
ஒப்பிலா மங்கள நாயகி — அம்மனுக்கு
உற்ற கும்ப நாதருட சித்தந்தனிலே

எப்போதுந் தெரிந்திருக்கும் — என்றுசொல்லி
யின்பமுள்ள கனியுங் குழம்புப் பாலும்
பாலும் மகிழ்ந்து கொடுத்தாள் — இளைப்பாறப்
பண்ணினுள் கலவித்தொழில் பண்ணினேமின்னம்

மேலும் அதைச் சொல்லமூன்று — நாட்செல்லும்
விடிந்தபின் காரியங்கள் நடந்ததெல்லாம்
நடந்தத்தைச் சொல்கிறேன் செய்த — காரியம்
நாலுபேர் சபையின் முன்னே மூலம் உரைத்தால்

தொடர்ந்த வினைகள் தீரும் – என்று மிக்கோர்
சொல்ல அறிவேன்வினை வெல்ல அறிவேன்
தனனு தனதனனு.

**வசனம்**

நொண்டி தாய்க்கிழவி மருந்தினால் மயங்கித் தன் கையில் உள்ள பொருள் முழுவதும் கொடுத்தமை உரைத்தல்.

**விருத்தம்**

நடையினுக்குப் பெண்ணானை நிகர்த்த மாது
நல்லதங்க முத்துவுடன் நானே கூடித்
தடையின்றிக் கேட்டதெல்லாங் கொடுத்து மென்கை
தனிலுள்ள முதல்கரைந்துஞ் சகலமான
கடைகளில்நல் வீதியம ருலோபி வீட்டிற்
கன்னமிட்டு நான்கொடுத்த கதைக ளெல்லாம்
விடையேறும் மருதலிங்கர் சபையின் முன்னே
விளம்புவேன் குதிகொண்டு கிளம்புவேனே.

**தரு - இராகம் : புன்னாகவராளி. சாபுதாளம்**

*தானனு தனதனனு - தன*
*தானதனு தனதானதனு*

வேசிமேல் மயல் கொண்டுநான் – மிக்க
வெறி கொண்டவர் போலே அறிவின்றியே
பூசையை மறந்துவிட்டேன் – குரு
போதிக்கும் மந்திர வினோதங்களும்
வினோதங்களை மறந்தேன் – தலை
மீதில் உருமாலில் நாதாக்கள்

மஞ்சே வீர மாகத் தந்த – மூலி
வைத்திருந்தேனதை யெத்துப்பண்ணி
யெத்தி யந்தத் தாய்க் கிழவி - தோசி
யென்னென் றெடுத்தாளோ பின்னுமவள்
வெற்றியாய் மருந்துகூட்டி – யென்கை
மிக்க பொருளைப் பறிக்க என்று
பறிக்க எழிலெடுத்தாள் - வெள்ளைப்
பாளையும் நாய்ப்பாகற் பூலாவேர்
சறுக்கான காஞ்சுறிஞ்சி – கருந்
தொட்டி கஞ்சாப்பேய்க் கொமட்டி கொட்டான்
கொட்டான்மலை கலக்கி – நல்ல
கூத்தான் குதம்பையும் நார்த்தையின்பூ
நெட்டான வாகைப் பிசின் – அரு
நெல்லிப்பிசின் காட்டு மல்லிகைவேர்
கையாந் தகரைவிரை - நெல்லிக்
காயுடன் பேச்சுரைக் காய் மத்தங்காய்
கொய்யா வடவேரும் – மிக்க
கோழி யாவாரையும் வீழியிலை
வீழி தலை அருளி – காட்டு
வெண்டையின் வேர் பெருஞ் சுண்டையின்வேர்
வாழைக் கிழங் குடனே – துத்தி
மாதளை வல்லாரை ஆதளையும்
ஆதளையும் நாவடக்கி – வாதம்
அடக்கித் திகைப்பூண்டு விடத்தலையுஞ்
சீதேவி செங்கழுநீர் – வட்டத்
திப்பிலி சிறுகீரை குப்பமேனி
மேனி கருந்துவரை – வெள்ளை
யேலங் கொட்டைக் கரு நீலிவிரை

ஒஞ்ங் கொடியுடனே – யின்னம்
　　உண்டானதும் கூட்டிச் சண்டியவள்
சண்டி கடைமருந்து – அரி
　　தாரங் கற்பூரம் செவ்வீரம் லிங்கம்
விண்டிடாத தின்னம் ஒன்று – துத்தம்
　　வெள்ளைச் சலாசத்துத் துள்ளு குட்டி

துள்ளு குட்டியுந் துரிசு – மலைச்
　　சுக்கும் அரத்தையுந் தக்கோலமும்
வெள்ளை யேலமுங் கிராம்பும் – மயல்
　　மீறும் அபின்கூகை நீருடனே

கூகை நீரும் சாம்பிராணி – குக்கில்
　　கொத்தமல்லி மஞ்சள் முத்தக்காசு
நாகரிகச் சாதிபத்திரி – சிறு
　　நாகப்பூச் சாதிக்காய் மோகமிக்க

மிக்க அதிமதுரம் – காம
　　வெறியை யுண்டாக்கும் நெறிவிடமும்
செக்கச்சிவந்த கொச்சி – மஞ்சள்
　　சிங்கி சீனிக்காரம் குங்குமப்பூ

பூவான உப்பைந்துடன் – காமம்
　　பொங்குங் கசகசா வுங்கதிக்க
வேவாசமாம் மதன – காமம்
　　மீறுஞ் சரக்கெல்லாங் கூறுகக்

கூறுய்ச் சவதரித்தாள் – கருங்
　　கூகைக் கண்ணும் இளங்தோகைச் சௌவும்
பேராய் நரியெலும்பும் – புற்று
　　மேலே நல்ல பாம்புத் தோலுடனே

தோலுஞ் செந் நாய்ப் பவன – வாயுங்
　　தூக்கணாங் தொண்டையும் மூக்குகளும்

வேலியில் இருந்துகண்ட — ஒன்றன்
மேற்றலையும் அது மாத்திரமா
மாடப் புறா நாக்கும் — மர
வட்டையுடனே கொட்டிடுந் தேள்
கூடிப் பனைமரத்தில் — இருக்
கும்படி கண்டத்தில் ஒன்பதுவும்
அதுவுங் குறுமுசலின் — காதும்
அண்ணாந்த ஆந்தையின் கண்ணும்பரி
முதுகுஞ் செய்யான் கரையான் — பாம்பின்
முட்டைக் குரங்கதின் குட்டிப் பல்லும்
பல்லுந் தேவாங் கிரலும் — கொட்டைப்
பாக்குப் புழுகருங் காக்கை நிணம்
வல்லூரு நெஞ்செலும்பும் — பெரு
மாவிற் குயிலதின் சேவலெச்சம்
எச்சம் புலிமீசை — பசு
வீனாக் கிடாரியின் சாணிப் புழு
மொச்சைக் கொட்டைப் புழுவும் — எலி
மூளை யிவைபல நாளினிலே
நாளினிற் கிழட்டோரி — தேடி
நன்று யிதுநிறை யொன்றாக
ஒன்றாய் வனமருந் — தெல்லாம்
உற்ற தயிலம் வடித்தெடுத்து
மன்றினிற் கடைச் சரக்கைப் — பேயின்
மருட்டி யிலைச் சாற்றிற் புரட்டிவைத்து
வைத்தந்தச் சாற்றினிலே — பின்னும்
மைபோல் அரைத்ததைக் கைபாகமாய்
வைத்துந் தசையூனை — ஒரு
வாயகண்ட நல்லதாய சட்டி

சட்டி தனிலேயிட்டு – மணத்
தப்பளையில் நூற்று முப்பதிட்டு
குட்டிக் கழுதை நெய்யை – விட்டுக்
கோசலமு மிட்டு மீசுரமாய்
மாயக் கள்ளி முன்மருந்து – கூட்டி
மாட்டுத் தொழுவத்திற் காட்டாமற்
காயஞ் செய்தே புதைத்துக் – கிழக்
கந்தல் மறுதிங்கள் வந்தவுடன்
உடனே யெடுத்தம்மியில் – இட்டு
ஒட்டி அரைத்துண்டை கூட்டையிலே
திடமாக வென்று மகள் – நாதஞ்
சேரும் அழுக்குகள் சேர்த்தனளே
சேர்த்தாளே காலடிமண் – ணுடன்
சேரவே தம்பல வேர்வைகளுஞ்
சேர்த்தும் அரைத் துண்டையாய்ச் – செய்து
செல்லப் பெண்ணேயிவளை வெல்லென்றுதான்
வெல்லப் பழத்தி னிலும் – பாக்கு
வெற்றிலை சுண்ணும்பில் நித்தநித்தம்
நல்லபால் தனிலும் இட்டாள் – அதி
லேலே மயக்கமும் மேலிட்டுதே
மேலிட்டே நினைவின்றி நான் – மயல்
மீறி அலைந்திடுங் கூறுகண்டாள்
சாலக்காரப் பெட்டி மகள் – நரைத்
தாய்க்கிழவி சப்பை வாய்க்கிழவி
கிழவி யெழி லெடுத்தாள் – ஓகோ
கேட்டீரோ காணும்நீர் தாட்டிகரே
பழகி வெகுநாளாய் – இந்தப்
பட்டணத்தில் வாலு செட்டியாருஞ்

செட்டியார் அமிர்தலிங்கஞ் — சந்திர
சேகரய்யன் குல சேகரய்யன்
பட்டணத்திற் பாரபத்தியஞ் — சேஷப்
பையனும் மத்யஸ்தம் அய்யனவாள்

வாழ்வு சிறந்தவர்கள் — நித்தம்
வாடிக்கையாய் வந்து கூடிக்கொண்டு
தாழ்வில்லாமல் யென் மகளைக் — குடி
தாங்கிறே மென்கச்சே நீங்கள் வந்தீர்

வந்தீ ரினிக் குறையோ — ஒரு
வார்த்தை சொல்வேன் போன கார்த்திகையில்
எந்தன் மகளும் ருது — ஆனாள்
என்று நகைபண்ண வெண்ணி அப்போ

அப்போ பெரிய கடைச் — செட்டி
அம்பல வாணன் சிதம்பரமும்
குப்பைய னிவர்கள் கையில் — வட்டி
கூட்டித் தருவேனென்று சீட்டெழுதி

சீட்டினில் இந்தமாசங் கண்டு — கெடுத்
தீர்த்துத் தங்கக்காசு நூற்றுப்பத்து
காட்டி வாங்கிப் பொன்வெள்ளியும் — முத்துக்
கல்லும் வயிரமும் நல்ல ரெத்தினம்

ரெத்தினப் பொடிகள் கொண்டு — மகள்
நாடகக் காலுக்குப் பாடகமும்
முத்து மாலையும் பொன்னரைஞாண் — சுட்டி
முன்கை முதாரியுங் கங்கணமுங்

கங்கணங் கொலுசுடனே — பொட்டு
கைக் கடையங்கள் பதக்கந்தண்டை
தங்க மோகன மாலையுடன் — பொன்சிந்
தாக்குச் சவடியும் மூக்குத்தியும்

கண்ட சரமுங் கொப்பும் — இன்னங்
கைக் கணையாழி பதக்கம் நகை
நகை பண்ணிப்பூட்டி வைத்தேன் — செட்டி
நாணயஞ் செல்லிலே காணும்பணம்

வகையில்லை யென்று சொன்னால் — ஆசை
வைத்த நகையெல்லாஞ் சுத்தக்கிரயஞ்
சுத்தக் கிரயம்பண்ணிச் — செட்டித்
தொல்லையைத் தீர்த்திட்டால் நல்லதென்று

தொத்தற் கிழவியவள் — சொல்லுஞ்
சூதும் மாமாலமும்வாதும் மெய்யாய்
மெய்யாக யான்குறித்தேன் — கன
மேட்டிமை யாய்க்கை மூட்டைதனை

வையாபுரிச் செட்டியைக் — கொண்டு
வந்து வைத்துக்கொண்டு மந்திரமாய்
மந்திரமுடன் சோதித்தேன் — முத்து
வச்சிரப் பொடிகளும் உச்சிதமாய்

விந்தையாய் நவரத்தினங் — தங்கம்
மிக்க உயர்ந்தது சொக்கவெள்ளி
வெள்ளியும் இதுகளெல்லாம் — என்னை
வேண்டி விலைபார்க்க ஆண்டிப்பத்தன்

உள்ளன்புள் ளோனையும் யான் — அழைத்
தொக்க வைத்துக்கொண்டும் அக்கறையாய்
அக்கறையுடன் பார்த்தும் — இது
ஐயாயிரம் பொன்னும் கையிற்றரத்

தக்கவன் வையாபுரியும் - அந்தத்
தட் சமயத்துக்கும் பட்சம்வைத்தான்
வைத்தான் கொடுத்தானே — பணம்
வாங்கிக் கிழட்டோரி வீங்கல்கையிற்

சுத்தமாய்க் கொடுத்துவிட்டேன் – கிழத்
தோசியவள் பணத்தாசையினுல்
நாலுநாட் சென்றவுடன் – சேலே
நல்லதாய் ஒன்றெனக் கில்லேயென்றும்

பாலுள்ளபசு வாங்கவென்றும் – கட்டிற்
பஞ்சணேயுந் தூங்கு மஞ்சமென்றும்
மஞ்சம் விளக்கென்றும் – ஆட்டி
வைத்து வைத்தென்னேயுஞ் சுற்றினளே

தானனுதன தனனுதன.

வசனம்

நொண்டி, தாசிக்குப் பலவிடங்களில் களவு செய்து கொடுத்தபிறகு அத்தாசிவீட்டைக் கொள்ளே யிட்டு, திருவாரூர் முதலிய தலங்களேத் தெரிசித்து ஆற்காடு சென்றதைக் கூறல்.

தரு - இராகம் : சங்கராபரணம். ஆதிதாளம்

*தனனு தன தனனு - தினனு*
*தனன தனன தனதனதனனு*

சுற்றினுன் கொண்டுதானே – கைமுதலே
தோற்றேன் திருட்டை யெண்ணிப் பார்த்தேனே
பார்த்தும் ஒருயோசனே செய்தேன் – சிவபூசை
பண்ணுவோர் அரிபூசை பண்ணுவோர்கள்

சாத்திரம் வேதங்கள் படித்தோர் – பார்ப்பார்கள்
சத்திரம் சாலேசோலேகள் வைத்தபுண்ணியர்
சாலேமடந் தண்ணீர்ப்பந்தல் – அக்கிரகாரத்
தருமங்கள் திருப்பணி தருமங்களும்

மேலும் வெகு தருமங்கள் செய்யும் — புண்ணியர்கள்
வீட்டிற்களவுசெய்யப் பாட்டை யல்லென்று
என்றுமுயர் வெகு கீர்த்திவான் — ஜற்சிகோட்டு
இங்கிலீஷு துரை மெச்சும் துங்கசுமுகன்

சுமுகமாய் றுவலர் சொல்லுங் — தமிழ்மாலை
சேர்க்கும் விதரணிகன் தீர்க்கயோகன்
தீர்காயுமான் மதிமான் — ஆசீர்வாதச்
செல்வனைப் பெற்றதுரை கல்விமிக்கவன்

மாற்கண்டப் பிரகாசவேள் — சற்குணனை
மருகனெனப் படைத்த பெருமையுள்ளவன்
பெருமை பெருகு பாக்கிய — நாதேந்திர
பிரபலன் வீட்டைக்கண்டு சரணஞ்செய்தேன்

சோதித்தேன் அப்பாற் சென்றேன் — பட்டணத்திற்
சோரஞ்செய்து பணங்காசு வாரிவாரியே
வாரிக்கொண்டு வந்துபோட்டேன் — வேற்றொரு
மாப்பிளை வரக்கண்டு தாப்புடனே

பேரான குரு அருளால் - நானொரு
பிரயோகஞ் செய்தேனே முறையுடனே
உடனந்தத் தாசிவீட்டில் — ஆஸ்திகள்
உள்ள தெல்லாங்கண்டு கொள்ளையிட்டேன்

நடந்தேன் ராத்திரியே — பாதைகூடி
நாச்சியார்கோயிற் சென்றேன் வாச்சுதென்று
வாச்சு தென்றந்த ஊரில் — திருக்குளம்
வடகரைச் சேஷபட்டர் இடந்தனிலே

பேச்சுண்டு நேயமுண்டு — அதினல்
பிசகா தென்றே முதல் அசைவாக
அசைவாய்ப் பதனம் பண்ணி — அவர்வீட்டில்
அக்கறையாய் முப்பழமும் வர்க்க வகையும்

இசைபெற அன்னம் பொசித்தேன் — தடங்கொண்டு
ஏற்றதிருச் சேறையின் மார்க்க மதாய்
மார்க்கமாய்க் குடவாசல் — திருக்கண
மங்கை திருவாரூர் பொங்கும் கமலை

கமலா லயந்தனிலே — ஆடினேன்
கர்த்தன் சதாசிவன் புற்றிடங் கொண்ட
விமல வசந்தத் தியாக — ராசருடன்
மெல்லியல் அல்லியங் கோதை வல்லியம்மனை

அம்மனையும் பணிந்தேனே — கீழ்வேளூர்
அட்டதிசை புகழ் நாக பட்டணத்திலே
விம்முமுலை வேசியழகி — வித்தைகண்டு
மெச்சினேன் மாலாய் நான் உச்சிதமாய்

உச்சிதமாய் அந்தலூரில் — வெகுவெகு
உளவு கண்டே நானும் களவுசெய்தேன்
தேன்மொழி அழகி ஆசை — அதிலலே
திரவியம் மிக்க நான் திருடவென்றே

பான்மையாய்க் காரைக்காலிற் — கீழத்தெருப்
பருத்த வர்த்தகன் மீரா மரக்காயன்
மரக்காயன் வீட்டினிலே — பொட்டியுடன்
வகையாய் ரெத்தினங்களும் அகப்பட்டதே

பெருக்கமாய்ச் சுறுக்காக — நடந்தேனே
பின்னையும் ஒருத்தனுண்டோ என்னைப் போல
என்னை நான் மெச்சிக் கொண்டேன் — தடங்கொண்டு
ஏகினேன் வடக்காகச் சீகாழியூர்

சீர்காழி யூர்தனிலே — வடக்குத்
தெருவினில் தென்சரகில் அருமைசெட்டி
நாகுதம்பி சட்டைநாத — செட்டிதன்னை
நத்திநான் வைத்தேனே ரத்தினப் பொட்டி

பொட்டிவைக்க வெகுநாளாய் — அவனிடம்
நம்புதலுண்டாதலினல் நம்பிவைத்தேன்
மற்ரு நாள் ஆற்காட்டிற் — பரிகள
வாண்டத்தைச் சொல்லுகிறேன் ஆண்டவனே
தனஞ தன தனஞ.

வசனம்

நொண்டி ஆற்காட்டில் நபாபு பாளையத்தில் சிப்பாயி வேடங்கொண்டு சென்று குதிரை பிடித்து வருகின்ற வழியில் தனது கால் நொண்டியானதை உரைத்தல்.

விருத்தம்

வரிவண்டு ஓலமிடுங் கழனிசூழ்ந்து
வளம்பெருகு மிடைமருதூர் மருதவாணர்
திரிபுரதாண் டவர்சபையில் முன்னடந்த
சேதிசொன்னேன் அப்பாலுஞ் செயநபாபு
பரிபாலனஞ்செய்வட சீமைதன்னிற்
படைதிரண்ட ஆர்க்காட்டின் பாளையத்திற்
பரிதிருடி யதிற்கண்ட பலன்களெல்லாம்
பகருவேன் வகைவகையாய்ப் பகருவேனே.

*தனஞ தனதனஞ - தனஞ*
*தனன தனன தனதன - தனஞ*

நபாபுமமு தலிகான் - ஆர்க்காட்டு
ராச்சியஞ் செய்திடும் மூச்சுறப்புஞ்
சிபாயி மார்களையுஞ் — சொல்லுகிறேன்
ஐமேது அயிதர்கான் யிமாம்கான்

இமா முருத்து முகான் — நத்தடுகான்
ஈஞ துகான் கடுக்கு அனவ ரல்லி
கம்ரோ தின்மிருஸ்ஸ‍ு — கானுடன்
காதர் வாஸ‍ுகான் ஸாதுல்கான்
ஸாத உஸேனுகான் — பாகனுகான்
கான்பாஜிகான் துஜானுகான் காய்முகான்
பாதர் மிறுதாசுகான் — யிஸ‍ுமியா
பலு மீசேக்குஸேன் குலாமுகான்
காஞ மகஞமியா — ஜபர்தஸ்ஸ‍ு
கான்மீருபதரு கான் ஸைதுஸேன்
கான்சாய்ப் பிபுராம்சாய் — அப்துல்க்
காதர் மகம்து பாதர் சாய்ப்பு
சாய்ப்பு மகமதுசா — தவுலத்துச்
சாய்ப்புச் சந்தா சாய்ப்புமீரா
சாய்ப்பு படே சாய்ப்பு — சோபி
சாய்ப்பு மகமது சாய்ப்புடனே
உடனே சேக்கு மம்முது — சிலேமான்
ஒலிமமுது மதார் முலுக்கு உசேன்
கடுக்கு பீருமமுது — வெகுதன
கர்த்தர் துலுக்கர்கள் மெத்தவதாய்
மெத்தவே கன்னடியர் — சாமண்ணு
வீரண்ணு மல்லண்ணு பாரண்ணுவும்
பெத்தண்ணு சுப்பண்ணுவும் — பாப்பண்ணு
பேராம் பவானி சிங்கு வீரரான
ராமசிங்கு லெட்சுமணசிங்கு — கிருஷ்ணசிங்கு
நாதநயன சிங்கு மாதவ சிங்கு
தாமோதர சிங்குவும் — அரன்சிங்கு
சரதகேசன் சிங்கு பரதசிங்கு

சிங்க மெனும் மாராட்டியர் — அப்புராவ்
ஜீவாஜி ராமராவ் பாலாஜிராவ்
சங்கரராவ் அண்ணுராவ் — ராமச்
சந்திரராவ்கோ விந்தராவும்

ராமோஜி காட்டிகையுஞ் — சட்டோஜி
நாகோஜி கேரோஜி லோகண்டராவ்
பீமராவ் பகவந்தராவ் — முத்தோஜி
வெங்கட்ரா வீரோஜி யிங்களையும்

இங்களை மனுக்கோஜி — நரசிங்க
இங்களை மாளோஜி — யிங்களையுங்
கங்காதர இங்களை — அப்புராவ்
காட்டிகை கிருஷ்ணராவ் காட்டிகையுங்

கைக்கார ராம்வடுகர் — வெகுதள
கர்த்தர்களாகிய சுத்த வீரர்
சொக்கலிங்க நாயக்கனும் — பங்காரு
சுப்பா நாயக்கன் அப்புநாயக்கன்

அப்பு நாயக்க னுடனே — அழகிரி
அய்யிலு நாயக்கன் மெய்யாலு
குப்பா நாயக்கனுங் — கண்ணப்பன்
குஞ்சா நாயக்கன் சஞ்சீவி

வீரா நாயக்கனும் — இப்படி
வெகுவெகு பேர்களும் மகிமையதாய்
பாரா சாரி குதிரை — அரபி
பச்சை நிரகஜி அச்சுசுமட்டம்

மட்டந்தொன்றி காபி - மாலவி
வகைவகை குதிரைகள் மிகமிகவாய்
ஒட்டகை யானைகளும் — அதினுட
உளவுகள் தெரிந்திடுந் தளபதிகள்

தளபதி ஜமேதுமார் – பட்டாளஞ்
சருதார் கும்பந்தான் சுறுசுறுப்பும்
பளபள வென்றெங்கணும் – துப்பாக்கி
பார்க்காரராம் வரிசை தீர்க்கங்களும்

தீர்க்கமாய் கபாத்துகள் – பலவிதஞ்
செய்திடும் முறைமையும் மெய்தானே
ஆர்க்கும் பயங்கரமாம் – பீரங்கி
அண்டங் கிடுகிடுக்குங் குண்டுகோபி

குண்டுகோபி சரகோபி – ஜெஞ்சாலி
குத்திடும் வல்லயங் கத்திகளும்
அண்டிய ஈட்டிகளும் – ஜமுதாடு
வங்கி யிருப்புலக்கை சங்கிலிகள்

சங்கிலி சூலம் அம்பு - சிங்காணி
சதிருள்ள ஆயுதம் பதினெட்டுகள்
எங்கும் வெகு பந்தோபஸ்தாய் – நபாபு
இருக்கின்ற பாளையத்திற் பெருக்க முடன்

உடனே குதிரை பிடித்து - வரவென்று
ஒயிலாக வெண்ணினேனே தயிரியமாய்த்
திடமான குண்டு விலங்கு - கத்திரெண்டாய்த்
தெறிக்க விலங்கு பூட்டுத் தெறிக்கவுமே

மேலான மூலிகைகள் – திலதங்கள்
மிஞ்சியவாடைப் பொடி அஞ்சனங்கள்
கோலா கலப்புலிநான் – கையடக்கங்
கொண்டு சிப்பாயிவேஷங் கொண்டிடவே

வேணுமென்ற துப்பாக்கியும் – முத்திரை
வில்லையுஞ் சிகப்புச் சன்னடை நல்லதலப்பா
பேணியே ஒரு முஸ்தீப்பு – முன்னமே
புரட்டுப்பண்ணிக் கொணர்ந்தேன் கருத்தாகக்

கருத்தாய்ச் சிப்பாயி வேஷந் – தரித்தத்தைக்
கண்டோர் மனதிற் பயங்கொண்டிடவே
திருச்சிறுப் பள்ளிதனிலே – யிருந்தந்தச்
சின்ன நபாபுவரச் சொன்னசிப்பாயி

சிப்பாயி யென்று ஒரு – கடுதாசு
தெற்றுமாயமா யெழுதி முத்திரைவைத்தேன்
உபாயமாகக் கொண்டேன் – ஆற்காட்டின்
ஊரினிற் பாளையத்தில் நேராக

நேராக வந்தேனே – சிப்பாயி
நெடுவலொருவன் கண்டான் வடுகனென்னை
என்னையே அடுக்காச்சான் – நீயேவூரு
எக்கட நுஞ்சிவஸ்தாவி ஏக்கட போத்தாவு

பின்னும் நூ எவுர்மனுஷி – என்றுமவன்
பேசினுன் கூடநானும் பேசினேன்மிக்க
மிக்கவே நேனு சிப்பாயி – என்றுசொல்லி
மின்னு திருச்சிறுப்பள்ளி சின்னநபாபு

தெக்கிறி நுஞ்சி வஸ்தானு பெத்த – நபாபு
தெக்கிறிக் கிஜாப்ப தீஸ்குனி போத்தானு
தானுத்திரவு கொடுத்தான் – வடுகப் பாராத்
தாண்டினேன் தெய்வத்தை வேண்டிக்

நானும் நடந்தேனே–யிந்துஸ்தானி [கொண்டேன்
நடுவான பாளையத்தில் தடதடென்றே
தடைசெய்தா னெரு சிப்பாயி – மெத்தமெத்தத்
தாவித்துக்கோண ஹெக ஹாஸெ ஆத்தே

எடுப்பாக உறுக்கிக் கிஸ்கி – அதிமிஹெ [என்றுன்
யாக்க ஹாஜாத்தே யென்றுன் நாகரீகமாய்
நாகரீகமாக முன்போல் – மறுமொழி
நானுஞ்சொன்னேன் யிந்துஸ்தானியிலே

வாகுடன் அம்சிப்பாயி — யென்றுசொல்லி
வருத்தமில்லாமல் நானும் திருச்சினுப்பள்ளி
திருச்சினுப்பள்ளி சோட்டே — நபாபு
பாஸுசெ ஆத்தே யென்று நயம் பெறவே
பெருக்க முடனே சொல்லியே — திரும்பநான்
பெடே நபாபுக்குப் பாஸு கடுதாசு
கடுதாசு லேக்கர் ஜாத்தோ — யென்றுசொல்லிக்
கடுகச் சுயசூரன் நான் நடந்தேனே
திடமுள்ள மாரட்டியன் — சிப்பாயி
சிகப்ப னொருவன் கண்டான் தூக்கோணென்றான்
கொணுக் கெட ஆலாஸு — யென்று பின்னுங்
குணுசமனு ஷீயித்த கோணுகோ ணென்றான்
கொணு ஜவள் ஜாத் தோஸு — என்றுவெகு
கொண்டு சொன்ன பேச்சைநான் கண்டுபரிவாய்
பரிவாக அமிசிப்பாயி — திருச்சினுப்
பள்ளி அஸுன் நபாபு ஜவள் யேத்தோ
கிரிதோர் நாபாபுஜவள் — காக்து
கேவுன் ஜாத்தோ வென்றேன் ஜவென்றானே
தானே உட்பாளையத்தில் — மமுதலிகான்
சாய்ப்பு மதார் முனுக்கு சாய்ப்புச் சந்தா
தானு பதிகளுடனே — சிறந்திடுஞ்
சமுகங்கண்டேன் நல்ல சுமுகமதாய்
அஜரத் நபாபு சாய்ப்பு — சலாமென்று
அண்டினேன் மைத்துலுக்கர் கண்டாரென்னைக்
கண்டவுடன் அம்கோணஹெ - கோண்சுதிமி
காஹா ஜாத்தே காஹா ஜாத்தே யென்றான்
மைசிப்பா யென்றேன்
கொண்டு வந்த கடுதாசியை — நான் கொடுத்துக்
கோப்புடனே திருச்சி னுப்பள்ளிஜே

ஜேநபாடுக் கேப்பாஸ் ஜாத்தே – என்றுவெகு
திறமை கொண்டே நின்றேன் சுறுசுறுப்பாய்த்
தானந்தக் கடுதாசுக்கு – மேல்விலாசஞ்
சட்டமா யிருந்ததைக் கண் டிஷ்டமுடனே

உடனே நபாபு சாய்ப்பு – பிரித்துப் பார்த்து
ஓகோகோ பிரட்டென்பதாக ஏகத்து
ஏகத்து லேகர் ஆய்ஸொ – அதிமீ
பக்காச் சோரகே உஸ்கி லேக்கர்

நைஞ்சுகர் பாந்துகர் பேடி – டால்க்கரென்று
கடுகியே கோபஞ்செய்தான் படபடென்றே
பயந்தே னில்லை நானும் – நபாபுசாய்ப்பு
பாரே மேடா லென்று வீரம் பேசினன்

வீர ரான மைத்துலுக்கர்கள் – என்னைத்தள்ளி
விட்டு மேல்ப்போட்ட செகப்புச் சட்டைத்
பேரான துப்பாக்கிகள் – இதுவெல்லாம் [தலப்பா
பிடுங்கிக் கொண்டே பாராவின் கிடங்குக்குள்ளே

கிடங்கினில் வைத்துக் கால்கை – அசைக்காமற்
கெட்டியாய் விலங்கு போட்டுத் திட்டமுடனே
கடந்து போகாத வண்ணம் – உள்ளறையின்
கதவுக்குப் பூட்டிட்டுப் பதனமதாய்ப்

பதனமாய்ச் சிப்பாயிமார் – ஆயுத
பாணி நின்றதை நன்றாய்த் தோணிக்கொண்டேன்
இதமுடன் யிதற்கு முன்னே – யென்வாயில்
இலங்க அடக்குமூலி விலங்கு தெறிக்குந்

தெறிக்கவே நானூதினேன் – யின்னமந்தச்
சின்ன வீட்டிற் போட்டிருந்த கன்னக்காறர்
குறிப்புள்ள எட்டுப் பேர்கள் – அவருக்குங்
கூட விலங்குவிட்டு நாடியவரை

அவர்க்கும் எனக்கும் திலதம்போட்டு – உரு
ஆரும் அறியாதவகை சூரன்நானே
சுவர்கல்லைப் பெயர்த்ததினால் – வெளிவந்த
சோடு தெரியாமலே வாடைவீசினேன்

வீசினேன் சிப்பாயிமார் எல்லோரும்
வெறிபிடித்தாப் போலே குறுகுறென்று
ஓசைப் படாம லிருந்தார் – நாங்களும்
ஒன்பது பேர்களுந் தென்புடனே

உடனே கஜானா தனிலே – உட்புகுந்து
உற்றுக் களவு செய்தோம் பத்துப்பைபணம்
படபடென் றெடுத்துக் கொண்டோம் – லாயத்திற்
பச்சை நிறக் கற்கியிலும் உச்சிதமாய்

உச்சிதச் சுழிசுத்தங்கள் – உள்ளதாய்
ஒரு புரவி பிடிக்கப் பெருமையுடனே
மெச்சிக்கொண் டென்னை நானே – குதிரையின்
மேற்றிறமாஞ் சாதி பார்த்துக் கொண்டேன்

கொண்டே குதிரை யெல்லாம் – கனையாமற்
குருசொன்ன மந்திரத்தை உருச்செபித்தேன்
பண்டு பழகினோர் போற் – கச்சைவெட்டிப்
பரியது மேற் கொண்டு விரைவாக

வாகுள்ள பரியதுவுந் – தெரியாமல்
மாற்றஞ் செய்தது மெத்த நேத்தியதே
நாகரீகம் பெறவே – பரிதன்னை
நடத்தினேன் பாளையத்தில் முடுக்காக

முடுக்காக எட்டுப்பேரும் – ஓடிவர
முன்சென்றேன் அவர்களென்பின் சென்றாரே
துடுக்காகப் பின்னும் நானே – சிப்பாயி
சூழ நின்றதைக் கண்டு வேழமென்னவே

வேடிக்கை யாகவொரு — கத்திதன்னை
வேண்டிப் பறித்துப்பரி தாண்டிவிட்டேன்
வாடிக் கடையுங் கடந்தேன் — புதுச்சேரி
மார்க்கங் கண்டேன் வெகு தீர்க்கமதாய்த்

தீர்க்கமாய்க் கூடவந்த — எட்டுப்பேர்க்குஞ்
சிலவுக் கொருபை பணம் நலமிகவே
யேர்க்கவும் நான் கொடுத்தேன் — அவரவர்
இருப்பிடஞ் சேருமென்று துரத்தினேனே

நேராக நான் வரச்சே — வனமொன்று
நேரிட்டுதே புலி நேரிட்டுதே
பாரியாங் குதிரைதன்னை நேரிட்டுப்
பாயவந்ததைக் கண் டுபாயஞ் செய்தேன்

உபாயமாய்ப் பரியின் — விலாப்புறம்
ஊணி யழுத்தினேன் தோணிக்கொண்டு
சபாசு பரிமேலாய்க் — கிளம்பியே
தாண்டயிற் புலியது தாண்டிடவே

வேளைப் பிசகு நாலே — புலியறை
மிகப்பட ஒருகால் அகப்படவே
வாளை யுருவிக் கொண்டு அகப்பட்ட
மட்டோடே காலையும் வெட்டினேனே

வெட்டினேன் புலிதன்னையுஞ் — செயங்கொண்டு
வீர சிங்கமும் நான் சூரத்துடன்
கட்டினேன் அந்தக்காலத் - தெரியாமற்
கரடகம் பண்ணினேன் விரைவுடனே

உடனே புதுவை நகரில் — நான்வந்து
உயர்ந்திடும் வர்த்தகன் போற்பயமின்றியே
கடையினில் வந்திறங்கிப் — பணமெல்லாங்
காட்டி விராகன் மாத்தி மூட்டை கட்டி

கட்டிக் கொண் டங்கொருநாள் – நானிருந்து
கடுகிக் குதிரைதன்னை முடுகிவிட்டேன்
அட்டதிக்கும் புகழுஞ் – சிதம்பரம்
அதனிற் கனகசபா பதியுறையும்
உறைகின்ற தலத்தில் வந்தேன் - நல்வேளை
உற்றதுவே அருள் பெற்றதுவே
துறவிகள் போற்றுகின்ற – சிற்சபை
துலங்கு மதனிற் கண்ட பலஞ்சொல்லுவேன்

தனனுதன தனனு.

வசனம்

நொண்டி சிதம்பரத்தில் நடேசரைத் தெரிசித்து, கனகசபாபதியென்னும் தீட்சிதரைக் கண்டு தன் கால் வளரும் மகிமையுள்ள தலம் எது என்று வினவ, அவர் இடைமருதின் மகிமையுரைத்ததை உரைத்தல்.

விருத்தம்

முல்லைநகைப் பெருநலமா முலைக்கிநேயர்
மூவுலகும் போற்றுமிடை மருதர்நாட்டின்
எல்லையுடனேமூர்த்தி கீர்த்தி தீர்த்தம்
இசைந்த வண்மை யீதெல்லா மென்பாற்சொன்ன
சொல்லை யெல்லாமுபதேச மாகக் கொண்டேன்
துய்யவராந் தீட்சிதரைச் சுமுகமான
தில்லைதனிற் கனகசபா பதியென் றெண்ணிச்
சிறந்திட்டேன் சூதுவினை மறந்திட்டேனே.

**தரு • இராகம் : நாதநாமக்கிரியை . ஏகதாளம்**

*தனஞ தனதனஞ தனஞ*
*தனன தனனதன தனதனஞ*

தில்லையிற் கனகசபா – பதியென்னும்
 தீட்சிதரைக் கண்டே ஞட்சிபெற
நல்லகுணமும் மிகுந்தோ ரவரெங்கென்
 நாட்டையும் ஊரையுங் கேட்டாரே

கேட்டார் சரிதையெல்லாம் – உள்ளபடிக்
 கே தவராமற் சொன்னேன் ஆதிமுதல்
நாட்டினில் உற்றது சொன்ஞல் – அற்றது
 நன்ருய்ப் பொருதுங் காணும் என்றுஅவரும்

உண்மையா யென்னைப் பார்த்துக் – கால்வளரும்
 உற்பதஞ் சொல்லுவேன் தலம் அர்ப்பதம் ஒன்று
வண்மைபெறு சோழ நாட்டிற் – சிவனுறை
 மருத வனத்தினுட பெருமையைக் கேள்

பெருமை சிறந்த முனிவோர் தாஞ்செய்யும்
 பெலத்த கருமங் தரும் பலத்தை யென்றே
ஒருவன் கர்த்தா உண்டென்றும் – இல்லையென்றும்
 உரைத்துக் கொண்டெல்லோரு மிருக்கும்போது

கும்ப முனியும் வரவே – முனிவர்கள்
 கூட்டங்கள் சந்தேகங் கேட்டிடவே
அம்பரம்போ லெங்கெங்கும் – நிறைந்திடும்
 ஆதி சதாசிவன் வேதப்பொருள்

பொருளே கர்ம கர்த்தா – உண்டென்றும்
 போதிக்க மெய்ஞ்ஞான நீதியுடன்
அருளதைக் காட்ட வென்றுங் – கேட்கவே
 அகத்தியருங் கன மகுத்துவமாய்

மகுத்துவ மான பரா சக்தியை
மனதில் வைத்தே தவம் புனிதமதாய்த்
தொகுத்திடும் நாளையிலே – சத்தியும்
தோன்றினளே உல கீன்றவளே

யீன்றிடுந் தாயெனவே - கும்பமுனி
யேதவஞ் செய்ததும் ஏதெனவே
ஊணிய கரும மெல்லாம் – தோன்றிடும்
ஒருபொருள் முனிவர்கள் தெரிசிக்கவே

வேணும் அம்மா கிருபை – செய்திட
வேண்டிக் கொண்டேன் மனம் பூண்டிடவே
காணுஞ் செய லுன்னிடம் – அல்லது
காரணம் ஏதுள்ளது பூரணமே

பூரண நிர்க்குணமே – யென்றவர்
போற்றிடச் சத்தியருள் பார்த்துடனே
ஆரணப் பொருளான – பரமனை
அகண்டத்தை யுன்னியே செகம்புகழச்

செகம்புகழ் மூகாம்பிகை – யென்றுதவஞ்
செய்திடவே அருளெய்திடவே
அகிலமும் அந்தரஞ் சொற்கம் - முவுலகுக்
காதியதாம் பரம் சோதியதாஞ்

சோதிமயம் அகண்டமாய் – நிறைந்திடச்
சுரரும் முனிவரெல்லாம் வரம்பெறவே
நாதன் மகாலிங்கமென் – றுதிக்கின்ற
நாதாந்த மெய்ப்பொருள் வேதாந்தமாம்

வேதாந்த தற்பரனுந் – தம்மைத்தாம்
வேண்டி அர்ச்சனை செய்த ஆண்டவனும்
நாதாந்த ரிடைமருதூர் – தனில்வளர்
நாயகராம் ஏகநாயகராம்

ஏக நாயக மூர்த்தி — அனுதினம்
இந்திராதி தேவர்கள் வந்தனம்செய்
நாகபூஷணப் பெருமான் — கயிலாச
நாதன் சகலபூத நாதரண்ணல்

அண்ணல் மருதவாணர் — அனுதினம்
அண்டர் பணியும்நீல கண்டபிரான்
கண்ணுதல் பிறைவேணி — அழலாடி
கங்கையணியுஞ் சிவ சங்கரனுர்

நாரணி பெருநலமா — முலைவல்லி
நாயகர் அகிலாண்ட நாயகராம்
ஆரணப் பொருளான — புவிதன்னை
ஆண்ட பிள்ளையைப் பெற்ற தாண்டவனுர்

தாண்டவர் செவ்வேளையும் — ஈன்றிடுஞ்
சச்சிதானந்த லிங்கர் இச்சையுடன்
பூண்டிடும் ஆவரணத் — தேவரைப்
புகலுகின்றேன் தலமகிமைகளை

மகிமை சிறந்த ஆரூர் — நாயகர்
மாலயன் போற்றிய ஆலங்குடி
தகைபெறுதக்கணு — மூர்த்தி
தலம் பிள்ளையார் திருவலஞ்சுழியாம்

வலஞ்சுழி சுவாமிமலைக் — குமரேசர்
மண்டலஞ் சேங்கனூர்ச் சண்டிகேசர்
நலம்பெறு தென்மாந்துறைச் — சூரியர்
நானிலம் புகழ்தில்லை ஞானக் கூத்தர்

தரணிபுகழ் சீர்காழிச் — சட்டைநாதர்
தானமாவடுதுறை ஞானநந்தி
பெருமை சிறந்த திதுவே — நடுவுறை
பிரபலம் யிடைமரு துறைவாணர்

வாணரே ஈசானியங் – தற்புருடர்
மங்கிய நாயடியார் உங்கதமே
தோணும் அகோரர் தென்பால் – ஆவிடைச்
சுருதிச் சத்தியோசாதம் யிருபொருந்தற்

பொருந்திடும் வாமதேவம் – சொக்கநாதர்
புண்ணியத் தலங்காணும் கண்ணுள்ளோரே
அருந்தவ முனிவரெல்லாம் – நாள்தோறும்
அட்டாங்க யோகம் செய்யும் சட்டங்களும்

சட்ட முள்ள மாரதமும் – வீதியும்
தடமும் மிகச்சிறந்த நடவானமும்
அட்டதிசை யெங்கும் புகழும் – கோபுரம்
அன்பர் பணியுங் கோயிற் செம்பொன் மதிலும்

மதிலும் அசுவமேதப் – பிரகாரம்
வண்மை சேர் கொடுமுடியின் உண்மைகளும்
பதியினில் வயிரவன்றன் – பிரகாரம்
பரமன் உறைகின்ற மருதடியும்

மருதடி வீற்றிருக்கும் – வாணருடன்
மன்னு மகாலிங்கமூர்த்தி சந்நிதியும்
திருவுருவான ஏக – நாயகர்
திகழுஞ் சகலதேவர் புகழ்ந்திடவே

புகழ்பெரு பெருநலமா – மூலையம்மன்
பொற்கோயில் பொன்னின் சிரக்கோயிலும்
அகிலந் தனையாண்ட – பிள்ளையார்
ஆலயஞ் சுப்பிரமணியர் ஆலயமும்

ஆலயந் தனில்வளரும் – மூர்த்தியும்
அற்புதம் மிகமிக அற்புதமாம்
மேலக் கோபுரவாசல் – குமரேசர்
விளங்குகின்ற சந்நிதியும் வளம்பெறுமே

வளம்பெறும் இடைமருதூர் – பூமியில்
மணலொரு லிங்கமாகும் குணமிகவே
விளம்பவும் என்னுலாமோ – அரகர
விண்ணோர்க்கும் அரிதான கண்ணுதலார்
கண்ணுத லிடங்கொண்டவர் – இவரென்று
காவியஞ் சொல்லும் மூவர்தேவாரம்
பண்ணுடனே பகர்ந்தார் – அண்டர்க்கும்
பார்த்திபன் போற்றிடும் மூர்த்தியதே.

தனனு தன தனனு தனனு.

### வசனம்

நொண்டி, கனகசபாபதி என்னும் தீட்சிதரால் திருவிடைமருதூர் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று விசேடத்தையும் கேட்டு அங்கு சென்று மகா ரதங்களில் சுவாமி அம்மனைத் தெரிசித்தமை உரைத்தல்.

### விருத்தம்

அருமறைப் பொருளா யெங்கும்
அகண்டமாய் நிறைந்து நாளும்
பெருநல முலையைச் சேர்ந்து
பிரபல மிகுந்த நாதன்
பருதிமா மதியுங் கண்ணுய்ப்
பாவிக்குந் தேவர் தேவன்
திருவிடை மருதூர் மேவும்
சிவனையே கவனிப் போமே.

தரு - இராகம் : புன்னாகவராளி. ரூபகதாளம்

*தானன தன தானதன தன*
*தான தனதன தானதன*

சோழன் பாண்டியன் பிரமகத்தி – தீர்த்த
துய்யர் இடைமரு தையர் முன்னாள்
வேழமாம் அயிரா வதத்தின் – வினை
தீர்த்ததன் சாபமும் தீர்த்தவராம்

வரகுணன் தன்னை ஆட்கொண்டவன் – தந்த
மங்கையை யேற்றிடுஞ் சங்கரனும்
பரவும் உரோமச மாமுனிக்கே – அருள்
பாலிக்கும் மெய்ப்பொருள் மூலமுதல்

முதலே திரியம்பகற்கு – வாக்கு
மூலந் தருமென்று ஓலமிட்டோர்
மதியூகி மார்க்கண்டர்க்கு – ஞான
மார்க்கஞ் சிவார்ச்சனை யேற்றுநெறி

நெறியே அருள்செய்த சிவன் – திரு
நீற்றைக் கொண்டே வினை தீர்த்திடுவோர்
உறுதியான கீர்த்தி மனு – ராசன்
உண்மையில் பூசைசெய் தன்மைகண்டே

கண்டுசேய் வரங்கொடுத்து – மிக்க
காட்சி கொடுத்தது மாட்சியதே
பண்டு காசிபன் பூசைசெய்யக் – கங்கை
பாங்கா யுதித்தது ஓங்குபுகழ்

புகழ் செம்பியன் சோழனுக்காய்
பொற்பிள்ளைக் கீந்தது பொற்சோழனும்
தம்மை மீனுணங்க லெல்லாம் – உயிர்
தான்பெற மீன்விலை யோன்பரவப்

பரவப் பொதியினிலே – செங்கற்
 பாளமெலாம் தங்கப் பாளமதாய்த்
தரணியில் அதிசயஞ் – செய்யும்
 சாம்பசிவன் கடும் பாம்பணியும்

அணிவோன் புராந்தகனும் – அழ
 லாடி பொன்னம்பலத் தாடுவனே
பிணிவல் வினைதீர்க்கும் – பண்டு
 பின்னும் கருங்காகம் பொன்னிறமாய்

பொன்னிறம்பெறச் செய்தபிரான் – அருள்
 பூரண மெய்ஞ்ஞான காரணராம்
மன்னும் இடைமருதில் – ஞான
 மார்க்க முனிவரும் ஏர்க்குகின்ற

ஏற்கும் பிச்சைச் சோற்றினுக்கு – யின்னம்
 ஏது பிறப்பென்று வாதுபண்ண
மார்க்கமாய்ச் சுணங்கென்பது – காசி
 மன்னவன் பெண்ணென உன்னதமாய்

உன்னதம்பெற வந்திடவே – முத்தி
 உற்றளித்தோன் கீர்த்தி எத்தனையோ
சொன்னேன் அறிந்ததை யான் - ஞானம்
 தோற்றும் மகத்தான தீர்த்தங்களே

தீர்த்தமாகும் கல்யாண – நதி
 செப்பமுடன் ஆடும் தைப்பூசத்தில்
நாற்றிசைபுகழ் சித்திரையின் – விஷு
 நல்ல தினத்தினில் எல்லவரும்

எல்லவரும் பணிந்து – தோயும்
 ஏர்வை பெருகிய காருணியம்
தொல்லை வினைதீர்க்கும் – காகம்
 சுத்தமாய்ப் பொன்னிறம் பெற்றுநன்றும்

நன்றும் கனகதீர்த்தம் – தேவர்
நத்திப் பணிந்திடும் ருத்திரநதி
சென்றுணாங்கன் மீன்களெல்லாம் – உயிர்
சேர்ந்திட்டு ருத்திரராய்ச் சேர்ந்தனரே

சேர்ந்தவர் பவந்துலைக்குஞ் – சந்திர
தீர்த்தம் சிவகெங்கை தீர்த்தமுதல்
கூர்ந்தமெஞ் ஞானந்தரும் – வெகு
கோடியாய்ப் புண்ணியம் நீடிடுமே

மேலாய் அனேகமுள்ள – தீர்த்தம்
மெய்யாக உண்டுகாண் பொய்யல்லவே
மாலும் அயனுடனே – தேவர்
மாமுனிவர் போற்றும் பூமியதாம்

பூமி யிடைமருதூர் – அருள்
பொங்கும் சிவமகா லிங்கமென்றே
தாமே உஷக்காலம் – கால
சந்தியும் உச்சிசா யந்தனிலும்

சாயரட்சையும் இரண்டாங்காலம் – நடுச்
சாமம் அனுதினம் நேமமுடன்
தூய வரிசையதாய் – மாசம்
தோறும் பஞ்சபர்வம் ஏறுபடி

ஏறுபடி யுடனே – பூசம்
எத்திசையும் போற்றும் உச்சவமும்
பேராய் நடந்துவரும் – இன்னம்
பேசுகிறேன் தஞ்சை போசலையாம்

போசலை குலத்தில் வந்தோன் – இந்தப்
பூதல மெச்சும் நராதிபனும்
போஜன் துளசேந்திரன் – அருள்
புத்திரனும் ராஜரெத்தினமாம்

மாலாம் சரபோசி — ராஜ
    மாணிக்கம் அன்புடன் காணிக்கையும்
மேலாம் மூவாயிரம்பொன் — இன்னம்
    வேண வருமானம் ஊணுதலாய்
ஊணுதல்செய்து கிராமங்களும் — மிக்க
    உம்பள முங்கன சம்பிரவமாய்
ஆணிப்பொன்பல ஆபரணம் — நாளும்
    ஆட்சியுண் டாச்செயும் காட்சிகளும்
காட்சியா யிதுகட் கெல்லாம் — கர்த்தன்
    கட்டளை யாதிக்கம் சட்டமிடுந்
தீட்சை சிறந்தவராம் — நலம்
    சேருந் தலமிக்க துறைசையதாம்
துறைசை ஆதீனமாம் — நாளும்
    சுத்தமெஞ் ஞானம்சொல் வித்தைமடம்
பேருயர் நமச்சிவாய — அன்பர்
    பேதமை தீர்க்கின்ற மாதவனுர்
தவமான தில்லைநகர் — ஈசர்
    சச்சிதா நந்தரை யர்ச்சனைசெய்
பவமோச காரணராம் — ஞானம்
    பாலிக்கும் சிவஞான சீலமுனி
முனியாஞ் சகலகலை — உண்மை
    முற்றும் உணர்ந்திடும் உத்தமனே
தினமுஞ் சைவாகமங்கள் — கொண்டு
    தீட்சைகள் செய்விக்கும் முக்கியராம்
உண்டாம் குருவருளின் — மிக்க
    உற்பன மெய்ஞ்ஞான அற்புதராம்
பண்டாரச் சந்நிதியும் — தீட்சை
    பாலிக்கும் தம்பிரான் மூலவர்க்கம்

மூலமான ஆதீனத்துட் — சேர்ந்து
மூர்த்தி கிருபைபெறுங் கீர்த்தியுள்ள
சுத்தன் குஞ்சுநிதியாம் சுப்பிரமணிய — னெனும்
முனிவன் அனுதினமும் முயன்றே பெருமை
மத்தியார்ச் சுனப்பெருமான் — கோயில் [யுற
வண்மை சிறந்திட உண்மைதரும்
தருணந் தனில் மிகவே — தன
தானியங் கோயிலுள்ளே நிரம்பும்
மருதவாண சுவாமி துணை — என்றே
வைப்பது முத்திரை ஒப்பமிட்டே
இட்டமான கட்டளைக்குக் — கர்த்தன்
ஏற்கும் இவரென்று தீர்க்கமதாய்ச்
சட்டமுள்ள கார்பாறி — முதல்
தானே படிப்படி யானவரில்
வரிசைக் கணக்கர்களும் — கிராம
வட்ட மணியருந் திட்டமுள்ள
பெரிதாங் கோயில் மணியம் — அன்பு
பெற்ற குருக்கள்மார் மற்றவரும்
மற்ற வேதிய தானிகரும் — கோயில்
வள்ளல் பிராமணப் பிள்ளைகளும்
கர்த்தனிடம் மெய்காவல் — நிதங்
கார்க்கின்ற வெள்ளாமுப் பிள்ளையுடன்
மார்க்கமுள்ள பண்டாரி — சராப்பு .
மன்னிய கொத்தர்கள் தன்னுடனே
நேர்மையான தச்சன் கருமான் — யின்னம்
நேத்தியாம் கம்மியர் வாய்த்தகுடி
குடிதான் கனசேவகரும் — வெகு
கோப்புடனே நல்ல வாய்ப்புடனே

கடலோசை போல்முழங்கும் – மேள
காரருஞ் சங்கீதக் காரருடன்
உடனே புலவோர்களும் – மிக்க
உண்டான தாசிகள் கண்டுநிதம்

புடைசூழவே வணங்க – நல்ல
பொன்னும் கனவிதச் செந்நெல்களும்
உண்மையாய் மிகும் பாக்கியங்கள் – தரும்
உச்சிதமாய் புவி மெச்சியவான்

தன்மைசேர் தயாநிதியாம் – அன்ன
தான சிரோமணி யானவரன்
வரன் அருணசலனின் – திட்ட
வட்டஞ் செய்யப்பெற்ற கட்டளையாம்

புரமே மத்தியார்ச்சுனமாம் – அதில்
புண்ணியக் கட்டளை பண்ணுநல்லோர்
நல்லோர் அகோரசிவன் - மிக்க
ஞான சிவாசாரிய ரானவரும்

வல்லவர்தர்மக் கட்டளையும் – இன்னம்
மகிமைப் பிச்சைக்கட்டளை மிகமிகவே
பேராம் அணக்குடியில் – வாழ்வு
பெற்றிடுங் கங்கைக் குலத்துதித்தோன்

காராளர் சைவநெறி – மிக்க
காசி முதலான தேசங்களும்
தேசந்தனில் புகழும் – மேழிச்
செல்வம் உயர்ந்திடும் கல்விகளும்

கல்விசேர் துரைசாமிநாத – முகில்
கட்டளை செய்வதும் இஷ்டமதாய்
செல்விசேர் தொண்டைமண் டலமாம் – கன
சீமானுமாகிய ராமலிங்கம்

ராமலிங்கம் கட்டளைக்கி — யிணை
நாட்டிலெங் காகிலுங் கேட்டதுண்டோ
சோமன் தீரா வினைதீர்த்தவன் — வேளும்
துய்யவன் கட்டளை செய்வதுவும்

உண்மையான பண்டிதராம் — பாவா
உற்பன கட்டளை யற்புதமும்
மண்ணச்சநல்லூர் ஆவிடைமால் — தர்மம்
மார்க்கமாய்ச் செய்திடும் தீர்க்கங்களும்

தீர்க்காயு மென்மேலும் — பெற்றுச்
செல்வஞ் செவிச்செல்வங் கல்வியுடன்
பார்க்குள் புகழ் பெருகும் — நிறை
பாக்கியவான் மணி வாக்கெனவே

எனவே கவிவாணர் — தமிழ்
யேர்க்கும் பிரபலம் ஆர்க்குமுண்டோ
கனவான் புதுக்கோட்டைச் — சீமைக்
காவலன் யிந்திரன் மாவலவன்

வல்லவன் குணநிதியாங் — தேச
மன்ன ரெல்லாம் மெச்சும் உன்னதவான்
சல்லாபன் ஒன்னலர்கள் — வந்து
தாச னென்றே சொல்லப் பூசல்செய்யும்

பூசலிற் செயவீமன் — சிவ
பூசை செய் விக்கிரம கேசரியாம்
ராஜா விஜய ரெகு — நாத
ராஜ பாதரென்று மேயதிக

அதிகப் பிரபலமாம் — பேரும்
ஆதிக்கமும் பெறும் நீதிபரன்
மதியூகி தொண்டமானூர் — ஜய
மன்னன் செய்கட்டளை நன்னயமும்

நன்னய முள்ள சுப்பிரமணிய – முகில்
நாடிய கட்டளை நீடியதும்
மன்னியர் புகழ் பழசைப் – பதி
மத்தியார்ச்சுன முகில் நித்தம்பணி

பணிந்தே செய்யுங் கட்டளையும் – திருப்
பணிப்பேட்டை வேளாளர் வனிதமிக்க
இணைந்தே யேகநாயகர்க்கு – விளக்
கேத்திய கட்டளை வாய்த்ததுவுங்

வாய்த்த பல கட்டளைச் – செட்டி
மார்களைப் போலினி யாருமுண்டோ
நேத்தி யாகவே வெங்கிட்டராம – செட்டி
நித்தம் அன்னமிடும் சத்திரமுந்

தீர்க்கமாகவே துறையூர்ச் – சீமை
செங்கோல் செலுத்துமுத் துங்கதுரை
அரியலூர் உடையார்பாளையஞ் – சீமை
ஆளுந் துரைமார்கள் நாளும் அன்பாய்

அன்பான மண்டபமும் – வில்வ
அற்சனை செய்வது உச்சிதமாம்
முன்பு சோழனும் பாண்டியனும் – செய்த
முக்கிய திருப்பணி மிக்கதுவே

வேத கோவிந்த தீட்சிதர்செய் – தர்ம
விதமும் பச்சையப்ப முதலி தருமம்
சோதிமா மயலிங்கர் கிருபை – பெறு
துய்யவ ளுகிய அய்யாவையன்

அய்யா வையன் தருமமுங் – கன
ஆதிக்க மாகுமிப் பூதலத்தில்
மெய்யாகுஞ் சாம்பசிவ – சாஸ்திரி
விளங்கவே செய்திடும் தளவரிசை

வரிசையாகும் முத்துமங்கை — பணி
மண்டபங் கோபுரம் எண்டிசைக்கும்
பெரிதாகும் கீர்த்தியுள்ள — தலம்
பேரான ஊரினிற் சேர்வையென்று

என்று வேதியர் எந்தனுக்குச் — சொல்லி
யிப்போ திருநாளும் தைப்பூசமாம்
சென்றால் வினைதிருமென்று — அவர்
செப்பும் உபதேசம் கேட்டவுடன்

கேட்டேன் விடைகொடுத்தார் — மனம்
கெம்பீரமாகவே நம்பிக் கொண்டேன்
நாட்டினிற் சீர்காழிதனிற் — சட்டை
நாத செட்டியிடம் ஆதரவாய்

ஆதரவுடன் வைத்திருந்த — பொருள்
அத்தனையுங் கொண்டு பத்திரமாய்ப்
பாதைகூடிப் பரியேறி — வேளூர்
பாங்கான மாயூரம் நான்கடந்தேன்

கடந்தேன் குத்தாலந் திரு — ஆலங்
காடு கடந்தேன் ஆவடுதுறை
கண்டுநான் பரியைவிட்டேன் — தொட்டுக்
காலிற் பொரந்திமரஞ் சீலமுடன்

நடந்தேன் கோவிந்தபுரம் — புகழ்
நாட்டுந் திருப்பணிப் பேட்டையதும்
பேட்டையது கடந்தேன் — அருள்
பெற்றிட நல்வேளை உற்றதுவே

கேட்டபடி தானே — நந்தி
கேசுரவாகர் மகேச ரண்ணல்
அண்ணல் மத்தியார்ச்சுனத்தில் - வந்தேன்
ஆச்சரியம் பாவம் போச்சுதையா

கண்ணுதல் மகா ரதத்தைக் – கண்ட
காட்சியைச் சொல்கிறேன் ஆட்சியதாய்
ஆட்சியாய் வடவீதி தன்னில் – மிக்க
ஆதிக்கமாம் மனுநீதி மன்னன்
வாஞ்சியான தஞ்சைப்பதி – வளர்
வாசவன் போசலே ராஜராஜன்
ராஜன் அமரசிம்ம – மகா
ராஜன் அருள்செய்யும் ராஜரெத்தினம்
போஜன் பிரதாபராம – ஜய
பூமன் சவுந்தர சோமனவர்
வளர்கின்ற உப்பரிகை – வாசல்
மார்க்கம் மகாரதம் தீர்க்கமதாய்
விளங்குஞ் சோதிர் மயமாய் – வரும்
மேட்டிமையும் வடம் பூட்டியதும்
பூட்டி வெகு ஆயிரம் - ஆள்கள்
பூண்டு இழுக்கவே தூண்டுவதும்
நாட்டி மிதி மரங்கள் - மேலே
நழுவாச் சவளக் கழிபிடித்து
பிடித்து மிதித்திடவே – அதின்
பின்பட்டக் கொம்பொடு தம்பட்டமும்
அடிக்க முழங்குவதும் – பிரம்
பாட்டிய கோலோட்டிக் கூட்டங்களுங்
கூட்டும் மருந்துகுழா – இட்டுக்
கொட்டாப்புளி முளை யிட்டோடவே
வேட்டு எழுப்புவதுந் – தேரை
வீதி திருப்பியே சாதனையாய்ச்
சாதனை கைபிடிக் கட்டையும் – வண்டிற்
சாயாச் சருக்கையும் ஓயாமலே

கோதிலாக் கொத்தர் கம்மியர்கள் — வெகு
கொம்புடனே மன தன்புடனே
நேராகத் தேர் செலுத்துங் — கன
நேயன் அதிக உபாயனுமாம்

வீர ரெல்லாரும் மெச்சும் — பெல
வீமனெனும் ராமசாமிக் கொத்தன்
ராமசாமிக் கொத்தனென்னும் — மகா
ராசா சபைமெச்சும் வாசாலகன்

பூமிமேல் ஏகநாயகனார் — அருள்
புண்ணியமே இவன் பண்ணுவதே
பண்ணறியும் கவிஞர்கள்மேல் — வெகு
பட்சமிகுந்த லட்சணிகன்

நண்ணி யுள்ளவன் அங்குநின்றான் — அங்கு
ராஜ வெகுமானம் பேசுமனம்
மனதே மகிழ்ந்துகொண்டான் — வெகு
வல்லாளனே உயர் சல்லாபனே

கனயூகி ராமசாமி — நல்ல
கைக்காரன் என்றவன் பக்கலிலே
பக்கலில் நின்று தேர்பார்த்தேன் — பச்சைப்
பாக்கெலுமிச்சம் பழங்கதலி

மிக்கநாளி கேரங்கள்சேர் — தேரின்
வேடிக்கையுங் கண்டு நாடிக்கொண்டேன்
கொண்டேன் ஏக நாயகரை — அருள்
கூடும் பரமேச பூரணரைக்

கண்டேன் வணங்கினனே — சிவ
காமி பெருநல மாமுலையாள்
ஆதார சத்திரதங் — கண்டு
ஆவ லுடனேநான் சேர்வை செய்தேன்

நாதூர்ண்ட பிள்ளைசுப்பிர — மண்ணியர்
நாகரீ கம்பெற வாகுளதேர்
தேரும் சுவாமிகளும் — மிகும்
சீர்த்தி பெருஞ்சண்ட மூர்த்தியருள்
கூடும் மகா ரதமுங் — கண்டேன்
கும்பிட்டு அஞ்சலி அன்புடனே
நேர்த்தியான கண்ணுக்கிதே — காட்சி
நேரிட்டுதே யிந்தச் சீரிட்டுதே
தோத்திரஞ் செய்து தேரின்பின்னே — சிவன்
தொண்டர்க்குத் தொண்டன்நான் அண்டி
அண்டினேன் குருபூசம் — இன்று [னேனே
அற்புதம் பார்சாமி சிற்பரந்தேர்
மண்டலம் புகழ்ந்திடவே — நிலை
வந்தது தேரஞ்சும் வந்ததுவே
தானனு தன தான தனுதன.

## வசனம்

நொண்டி ஏகநாயகரைத் தைப்பூசத்தில் தெரிசித்துக் கல்யாண தீர்த்தத்தில் நீராடியபின் கால் கூடியமை உரைத்தல்.

## விருத்தம்

தேருநிலை கண்டுவந்து சுவாமிகோயிற்
சென்று அபிஷேக நைவேத்தியமுங் கொண்டு
பாரிலுள்ளோர் கொண்டாட விடையிலேறி
பவழக்கால் மஞ்சமுற்றுப் பவனிகூடிச்

சீருயர்ந்த காவிரிகல் யாணதீர்த்தந்
தேவர்முனி வோர்மனிதர் சிறந்தேயாடப்
பேருயர்ந்த அருள்கொடுக்கும் மருதவாணர்
பெருமைதான் மிகமிகவும் அருமைதானே.

தரு - இராகம் : சாவேரி. ஏகதாளம்

*தனன தனன தன தனன தனன தன*
*தனதனதானன தனதன தானன*
*தனதனதானனு*

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகர்
அப்பணி மருதீசர் செப்பம தாகவே
தைப்பூச மதிலே
மகிமையாய்க் கல்யாண தீர்த்தம் கொடுக்கவும்
வரிசைய தாகவே அரியயன் அமரர்கள்
அரகர வெனவே
முனிவர்கள் பூதல மன்னர் மனிதர்
முறைமுறை பணிந்து இறையவ சங்கர
கறைமிடற் றோனே
பனிவரை மாதுமை பாகா வென்றிட
பவனியுள் ஆனை முகவன் குமரேசர்
குவலையம் போற்றும்
தாயெங்கள் பெருநலமுலையாள் நந்திகேசர்
சண்டேசர் சூழமண்டிய கணங்களும்
அண்டர்கள் பரவ
நாயகராம் ஏக நாயகர் நலமிகும்
நாதாந்தப் பொருள்விடை மீதினி லேறி
வீதியில் வரவும்

எடுபடி மகர தோரணங்கள் யிடைக்கியம்
இலங்கு பெரியமேளம் துலங்கு சங்கீதமேளம்
நலம்பெற ஒலிக்க

நடனஞ்செய் தேவதாசிகளும் பரத
நாட்டியம் ஆடவும் பாட்டுகள் பாடவும்
கூட்டங்கள் கூடி

வேதியர் வேதங்கள் ஓதும் வரிசையும்
மெத்தவே ஓதுவார் பத்திய தாகவே
நர்த்தஞ் செய்வதுவும்

பண்ணுடன் மூவர் தேவாரந் தலத்தினில்
பண்டாரம் திருவாரூர்ப் பண்டாரம் முதலான
பண்டார வரிசைகளும்

கண்ணுதற் சிவனடியார்கள் கூட்டம்
கட்டளை யாதீனங்கள் அட்டதிக்கும் புகழ்
திட்டங்களான

துறைசையா தீனமுடன் சூரியனூர்
கோயிலும் தருமபுரம் இறைவர் அண்ணாமலை
சிறந்திடும் சின்னம்

பாரினில் மிக்க ஆதீனம் வளர்ந்திடும்
பண்டாரச் சந்நிதிகள் அண்டிய தம்பிரான்கள்
எண்டிசை சூழ

தேவாதி தேவ யேகநாயக
சிவசிவ வென்றொலி குவலயம் புடைக்கப்
பவனியுஞ் சிறந்து

மேவிய குணபால் தென்பால் மேற்கு
வீதியும் வடக்கு வீதியும் மகத்தான
வீதியும் விளங்கக்

காவேரிக் கரையின் மண்டபத்தில் சேர்ந்து
கல்யாண தீர்த்தம் எல்லோர்க்கும் அருள்செய்ய
நல்லதாம் சமையம்

பாவங்கள் தீருமென்றே யாள்பரிபுர
பயிரவி பஞ்சமி வயிரவி மாதங்கி
மயிடனை வென்றாள்

மந்திரரூபி அம்பிகையாம் பெருநல
மாமுலை யம்மன் வாமத்தில் உறைந்திடும்
சோம சுந்தரராம்

எந்தையாம் இடைமரு தீசர் தாளிணை
எண்ணியே அரகர கண்ணுதலானே
விண்ணவர்க் கரிதாய்

அடியவர்க் கெளிதான பொருளே வேதத்தின்
ஆதியே அந்தமே சோதியே சுடரே
நாதச் சின்மயமே

கடிகமழ் கொன்றைத் தாரணி சடைமுடிக்
கர்த்தனே நித்தனே சுத்தஞானத்துடன்
நத்துவோர்க் கருளும்

பூரண காரண நமவே யென்வினை
போக்கியே தொண்டர்க்காளாய் ஆக்கியே
ஏர்க்கவும் அருள்சீர் [கிருபையான்

வாரண முகம்பெற்ற ஆண்ட பிள்ளையும்
மைந்தனெங்கும் ஆன கந்தனைப் பெற்றஆ
னந்தப் பலனே

என்றுநான் துதிமிகச் செய்துகாவிரி
யேபவ மோசனி யேஞான காரணி
யேபொன்னி நதியே

குன்றெனும் சைகைதனிலே அகத்தியர்
கும்பத்தில் உதித்து அம்புவி தனில்வரும்
அன்புள்ள அம்மா
தேவியென் ருடினேன் தீர்த்தம் வினையெல்லாம்
தீர்ந்துகால் வளர்ந்தது வாய்ந்த கரையிலேறிப்
பாந்தம துடனே
பூவினில் அதிசய மெனவே திருநீறு
பூசியென் மனதில் மாசின்றி யிடையரு
தீசன்தன் பாதம்
போற்றவும் கோயிலில் சென்றேன் காணிக்கை
பொருந்தமுன் னூறுபொன் திருந்தவுங் கொடுத்
விரும்பிய சேர்வை [தேன்
வாய்த்தது கண்டுநான் களித்தேன் மாலயன்
வாசவன் அமரர்கள் பூசனே செயும்மரு
தீசனே சரணம்

தனன தனனதன தனனதனனதன.

வசனம்

நொண்டி கால் கூடிய ஆனந்தத்தால் சுவாமியைத் துதித்தல்.

ஆனந்தக் களிப்பு

தரு - இராகம் : நாதநாமக்கிரியை . சாபுதாளம்

*தனதந்த னதந்த னை தன*
*தான தனதந்த னதந்த னை*

சிவசிவ மருதய்யா சரணம் – ஞான
சிற்பர தற்பரா னந்தனே சரணம்

புவனம் படைத்தவா சரணம் – வேத
பூரண காரண விமலனே சரணம்
தனதந்த ஞதைந்த ஞஞ தன
மூவரும் ஒன்ருன பொருளே – யோக
முனிவோர்கள் சித்தர்க்கும் எட்டாத பொருளே
தேவர்க்கும் எட்டாத பொருளே – தொண்டர்
சிந்தையில் வாசம்செ யிந்திரப் பொருளே
தனதந்த ஞதைந்த ஞஞ தன
பிரமத்தி தீர்த்தருளும் மூர்த்தி – எங்கள்
பெருநல மாமுலை மருவவளர் மூர்த்தி
வரகுணன் பத்திசெய்யும் மூர்த்தி – அருள்
வாரிசிவ சங்கர மகாலிங்க மூர்த்தி
தனதந்த ஞதைந்த ஞஞ தன
தொண்டர் பிணி தீர்த்தருளும் மருந்தே – ஞானந்
தோயும் வேதாந்தமாம் மலையினுள் மருந்தே
அண்டர் முனிவோர் தொழும் ஆருயிர் மருந்தே-எங்கள்
அன்புருவாம் மகாலிங்க மருந்தே
தனதந்த ஞதைந்த ஞஞ தன.

வாழி சிவக்கொழுந்தும் பரம்பரையும் வாழி
வாழி சுப்பிரமணிய முனிவரனும் வாழி
வாழி துறைசைவளர் ஆதீனமும் வாழி
வளர்புலவர் சிவனடியார் வாழி வாழி.

திருவிடைமருதூர் நொண்டிநாடகம் முற்றிற்று

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —